விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 27 வெள்ளிக்கிழமை (11.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பலத்த எதிர்ப்புக்கு மத்தியில்
## குற்றப் பிரேரணை விவாதம்
### அமைச்சர் நிமலினால் தீர்மானம் சமர்ப்பிப்பு

*(கொழும்பு)*, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடத்திய விசாரணையின்போது அவர் குற்றவாளி என காணப்பட்டுள்ளார் எனவும் அவரைப் பதவி நீக்கும் யோசனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறப்படும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்டது. இந்த யோசனையை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த வழிமொழிந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா மேற்படி யோசனைக்கு எதிராக நீண்ட நேரம் கருத்துக் களை வெளியிட்டார். (19ஆம் பக்கம் பார்க்க)

## சவுதி தூதுவர் மீள அழைப்பு

சவுதி அரேபியாவின் றியாத்திலுள்ள இலங்கைத் தூதுவர் அகமட் ஜவாத் மீள் அழைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

ரிசானாவின் மரண தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே சவுதி அரேபியாவின் றியாத்திலுள்ள இலங்கைத் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டார் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்தார். (எ-11)

## 10 நாட்களில் 40 டெங்கு நோயாளர்!

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த 10 நாட்கள் மட்டும் 40 பேர் டெங்கு நோயாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய்த்தடுப்புப் பிரிவின் புள்ளிவிபரத் (19ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரமாக தொழில் செய்ய முடியாமல் வட பகுதி மீனவர் திண்டாட்டம்
### பிரான்ஸ் தூதரிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியா மற்றும் தென்னிலங்கை மீனவர்கள் எமது கடற்பரப்பிற்குள் சுதந்திரமாக தொழில் நடவடிக்கையில் ஈடுபட முடிகின்ற போதிலும் நாம் எமது கடற்பரப்பிற்குள் சுதந்திரமாக தொழில் செய்யமுடியாத நிலையில் காணப்படுவதாக யாழ். வந்துள்ள பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபினிடம் வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம் எடுத்துரைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்ட பிரான்ஸ் தூதுவர் வடபகுதி மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராயும் முகமாக வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பினரை அவர்களது அலுவலகத்தில் நேற்று மதியம் 12:30 மணியளவில் சந்தித்திருந்தார்.

இச்சந்திப்பின்போது மீனவர்களுக்கு பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்படுகின்ற கட்டாய நிலைமைகள் இந்திய, தென்னிலங்கை- வடபகுதி மீனவர்களுக்கிடையிலேயான கடல் எல்லையைத் தாண்டும் பிரச்சினை, அபிவிருத்தித் திட்டங்கள் என்பன விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பு தொடர்பில் வட மாகாண கடற்றொழிலாளர்கூட்டமைப்பின்தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவிக்கையில், வடக்கில் மீனவர் தொழில் நடவடிக்கை (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் மழை வெள்ளம் 17 ஆயிரம் பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மழை வெள்ளத்தினால் 17 ஆயிரத்து 388 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு நேற்று மாலை வரை கிடைத்த தகவலின்படி அறிய முடிகிறது என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

இதில் ஊர்காவற்றுறையில் ஆயிரத்து ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 318 பேரும், பருத்தித்துறையில் 802 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து839பேரும், வேலணையில் 393 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 358 பேரும், சண்டிலிப்பாயில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 53 பேரும், கரவெட்டியில்135 குடும்பங்களைச் சேர்ந்த 571 பேரும், மருதங்கேணியில் 1,639 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 807 பேரும், சங்கானையில் ஆயிரத்து 276 பேரும், கோப்பாயில் 65 குடும் (19ஆம் பக்கம் பார்க்க)

## ரிசானாவின் கழுத்தை வெட்டியே மரண தண்டனை நிறைவேற்றம்

சவுதி அரேபியாவில் ரிசானா நபீக்கிற்கு கழுத்து வெட்டி, மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ரிசானாவை விடுதலை செய்யுமாறு பல தரப்பில் இருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதும் சவுதி அரசு மரணதண்டனை நிறைவேற்றியதாக ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துள்ளது.

ரிசானாவுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தியைக்கேட்டு தான் உண்மையில் கலக்கமுற்றதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரப் பொறுப்பு தலைமை அதிகாரி கெத்தரின் ஏஸ்டன் தெரிவித்துள்ளார்.

ரிசானாவை மரணதண்டனையில் இருந்து விடுவிக்குமாறு. (19ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகள் பணி விலகல்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்றும் இன்றும் பணிகளில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் இந்தத் தீர்மானம் காரணமாக நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களில் நடக்கும் விசாரணைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நீதிவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் சங்கத்தினர், சட்டத்தரணிகள் தமது பணிகளில் இருந்து விலகிக்கொண்டால் நாடுமுழுவதும் உள்ள நீதிமன்றங்களின் பணிகள் பாதிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத்தீர்மானம்தொடர்பான அறிக்கை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் அதனை விவாதத்திற்கு எடுப்பதும் சட்ட விரோதமானது என சுட்டிக்காட்டிஉள்ள நீதிவான் கள் சங்கம் அரசாங்கத்தின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்துள்ளது. (எ-11)



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வழக்குரைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று முற்பகல் ஆரம்பமானது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களை படத்தில் காணலாம்.

## சட்டத்தரணிகளிடையே மோதல்
## நீதிமன்ற வளாகத்தில் பதற்றம்

(கொழும்பு)

கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் நேற்று பதற்ற நிலை காணப்பட்டது.

குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவான சட்டத்தரணிகளுக்கும், எதிரான சட்டத்தரணிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது

குற்றவியல் பிரேரணைக்கு எதிரான நாடாளுமன்ற விவாதங்களை ரத்துச் செய்யக்கோரி பிரதம நீதியரசருக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் சங்கம் ஆர்ப்பாட்டப் பேரணியை ஏற்பாடு செய்தது. இந்தப் போராட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டு மற்றுமொரு தொகுதி சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இந்தப் போராட்டங்களின் காரணமாக புறக்கோட்டைப் பகுதியில் கடும் வாகன நெரிசல் நிலைமை ஏற்பட்டதன் காரணமாக புறக்கோட்டை, மிஹிந்து மாவத்தையிலிருந்து புதுக்கோட்டை உயர் நீதிமன்ற வளாகத்திற்கு செல்லும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டிருந்தது.

இதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை குறித்த பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கை தொடர்பான விவாதம் நேற்று ஆரம்பமாகவிருந்த நிலையில், தெரிவுக்குழுவுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக பாராளுமன்ற வளாகத்தில் ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகும் நேரத்தில் தெரிவுக் குழுவுக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ரிசானாவின் குடும்பத்துக்கு விரைவில் புதிய வீடு!

## சவுதி தனவந்தர் முன்வருகை

(கொழும்பு)

வறுமையின் நிமிர்த்தம் சவுதி அரேபியா சென்று, மரண தண்டனைக்குள்ளான ரிசானா நபீக்கிற்கு வீடொன்றை அமைத்துக் கொடுக்க சவுதி தனவந்தர் ஒருவர் முன்வந்துள்ளதாக பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதியமைச்சரின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சவுதியில் பணிப் பெண்ணாக கடமையாற்றிய நிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ள ரிசானா நபீக்கின் குடும்பத்தாரின் வறுமை நிலையை கருத்திற் கொண்டு அவரது குடும்பத்தினருக்கு வீடொன்றை அமைத்துக் கொடுக்க சவுதி அரேபியாவைச் சேர்ந்த தனவந்தர் ஒருவர் முன்வந்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவருடன் கலந்துரையாடிய போது நான்கு மாத காலத்திற்குள் ரிசானா நபீக்கின் குடும்பத்தினர் வசிப்பதற்கு சகல வசதிகளும் கொண்ட வீடொன்றை அமைத்துக் கொடுப்பதற்கு அவர் முன்வந்துள்ளதாகவும் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். (எ-11)

# பத்திரிகை விநியோகஸ்தர் மீது மாலுசந்தியில் வைத்து தாக்குதல்

## பத்திரிகைகள் தீயிட்டு எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வெளி வருகின்ற உதயன் பத்திரிகையின் விநியோகஸ்தர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை பருத்தித்துறையில் வைத்து அடையாளம் தெரியாதவர் களினால் தாக்கப்பட்டுள்ளார்.


அவர் விநியோகத்திற்காக எடுத்துச் சென்ற பத்திரிகைப் பிரதிகளும், அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் எரிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை மாலுசந்திக்கு அருகில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள 30 வயதுடைய நாகேஸ்வரன் பிரதீபன் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

வழமைபோல இவரும் மற்றொரு விநியோகத்தரும் பத்திரிகை விநியோகத்திற்காக பத்திரிகைக் கட்டுக்களுடன் சென்று கொண்டிருந்த போது ஆளரவமற்ற மாலுச் சந்திப் பகுதியில் வைத்து இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் முன்னால் சென்றவரை மறித்துள்ளார்கள் . ஆயினும் அவர் நிற்காமல் ஓடித்தப்பிவிட பின்னால் வந்த பிரதீபனின் சைக்கிளை நிறுத்தச்செய்து அவரைத் தலையில் தடி யொன்றினால் தாக்கியுள்ளனர்.

தலையில் அடி விழாதிருப்பதற்காகக் கையினால் தடுக்க முயன்றபோது, கையில் காயம் பட்டு முறிவேற்பட்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

அடியோடு கீழே விழுந்தவரை, வீதியோரத்துக் கானில் வீழ்த்தி சரமாரியாகத் தாக்கிய அடையாளம் தெரியாத நபர்கள், அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளையும் பத்திரிகைக் கட்டுக்களையும் தீயிட்டு கொளுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.



காயமடைந்த பிரதீபன் தாக்குதலில் இருந்து விடுபட்டு நெல்லியடி பகுதிக்குச்சென்று வான் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு தப்பி வந்துள்ளார். இக் தாக்குதல் தொடர்பாக அவர் நெல்லியடி பொலிஸாரிடம் முறையிட்டதன் பின்னர் அவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11,24,74)

# மதிலுடன் மோதியது பஸ்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டையிழந்த பயணிகள் பேருந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம் பஸ்தியான் சந்தியில் கண்டி வீதியில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளுடன் நுவரெலியா நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.



இதில் பயணித்த பயணிகள் சிறு காயங்களுடன் தப்பினர். இருப்பினும் விபத்து இடம் பெற்றதும் சாரதி அவ்விடத்தைவிட்டு ஓடிச் சென்றதாக தெரிவிக்கப் படுகிறது. (எ-4,6)


**போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்**

தேசிய ஒருமைப்பாடு ஒருங்கமைப்பாளர், பதிவாளர், முகாமைத்துவ உதவியாளர், கிராமசேவையாளர், முகாமைத்துவ தரம் III லிருந்து தரம் II ற்கான பதவியுயர்வு பரீட்சைகளுக்கானது.

சனி, ஞாயிறு தினங்களில்நடைபெறவுள்ளன.

தொடர்புகளுக்கு 075 4164564

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)



**பிள்ளையார் இன்**

40% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(க-1970)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**பேருந்தினை வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காக பல்கலைக் கழகத்திற்கு தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு ஆங்கில இலங்கைப் பதிவுடைய கீழ்க் குறிப்பிட்ட வகை பேருந்து ஒன்றின் சேவையை அவ் வாகனத்திற்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலைகள் போன்ற வற்றுடன், கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து கோரப்படுகின்றது.

- ஆசன எண்ணிக்கை 54 குளிரூட்டப்பட்டது
- ஆசன எண்ணிக்கை 54 குளிரூட்டப்படாதது
- ஆசன எண்ணிக்கை 42 குளிரூட்டப்படாதது

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 2013.01.18 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப் பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விபரங்களை நிர்வாகக்கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். பல்கலைக்கழக கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்

(சி-2096)


# உயிர்பெறத் தொடங்கும் யாழ்.பல்கலைக் கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகம் நேற்றைய தினமும் குறைந்தளவான மாணவர்களைக் கொண்டே இயங்கியது.

கடந்த 40 நாட்களுக்கும் மேலாக மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்பு காரணமாக இயங்காது இருந்த யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம், முகாமைத்துவ பீடம், விஞ்ஞான பீடம், ஆகியன நேற்றைய தினமும் முழுமையாக இயங்காத நிலையிலேயே காணப்பட்டன.

எனினும் முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள் ஓரளவு வருகை தந்திருந்ததனால் நேற்றையதினம் முகாமைத்துப் பீடம் ஓரளவிற்கு உயிர் பெற்றுக் காணப்பட்டது.

இருப்பினும் மருத்துவ பீடத்தினைத் தவிர்ந்த ஏனைய பீடங்கள் முன்பு போல் வழமைக்கு இன்னும் திரும்பவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

விஞ்ஞான பீடத்தினைச் சேர்ந்த 3 மாணவர்களும், முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த 15 மாணவர்களும், நேற்றைய தினம் வருகைதந்ததோடு கலைப்பீடத்தினைச் சேர்ந்த மாணவர்கள் எவரும் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. (எ-4)

## புத்திரசிகாமணிக்கு கொலை அச்சுறுத்தல்

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு முன்னாள் பிரதியமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான வி.புத்திரசிகாமணிக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.


இது தொடர்பாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய் கிழமை பகல் கொழும்பிலிருந்து நுவரேலியா நோக்கிச்சென்றுகொண்டிருந்த பொழுது தனக்கு தொலை பேசி அழைப்பொன்று வந்ததாகவும் அந்தத் தொலைபேசியில் மறுமுனையில் பேசிய வரை அடையாளம் கண்டுகொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். (எ-1)






# ஆத்ம ஈடேற்றப் பிரார்த்தனை



எமது பாடசாலையின் நூலக ஆசிரியர்

**செல்வி சகுந்தலாதேவி**

அவர்களின் அன்புச் சகோதரன்

**அமரர் சபாரட்ணம் தர்மராஜா**

*(ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர்)*

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.சங்கம், பழைய மாணவர் சங்கம்,

யா/பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எறும்பின் கர்வம்

ஒரு சமயம் இவ்வுலகில் உள்ள எறும்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு மகா நாடு நடத்தியது. அந்த மகாநாட்டின் பெயர் அகில உலக எறும்புகள் மாநாடு.

அதிலே ஒரு எறும்புத் தொண்டர் உரையாற்ற ஆரம்பித்தார்.

"எறும்புச் சகோதர்களே! சகோதரிகளே!

இந்த உலகத்திலே நமக்குப் பெரிய எதிரி எது என்று கேட்டால், அது யானைதான்.

நாம் எல்லோரும் சேர்ந்து கூட்டமாக எங்கேயாவது சென்று கொண்டிருப்போம். அப்போது திடீரென ஒரு யானை வந்து எம்மீது காலை வைக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். என்ன நடக்கும்? ஆயிரக்கணக்கான நமது தோழர்கள் மாண்டு போவோம். இதைத் தடுத்து நிறுத்த என்ன வழி என்பது பற்றி நாம் சற்று யோசிக்க வேண்டியுள்ளது" என்றார்.

அதனைத் தொடர்ந்து ஒரு எறும்பு பிரதிநிதி பேச முன் வந்தார்.

"நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது எதிரியான யானையைக் கொல்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்" என்று கூறி விட்டு அமர்ந்து கொண்டது.

கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தார்கள். அவர்களுக்குள்ளே ஒரு அகில உலகத் தலைவரைத் தேர்ந்தெடுத்து அந்தத் தலைவர் கடவுளைத் தவம் செய்து அவரிடமிருந்து ஒரு வரம் பெறுவது. அதாவது "**நாம் யானைகளைக் கடித்தால் அது சாக வேண்டும்**" அப்படியென்ற வரம். இதுதான் அவர்கள் எடுத்த முடிவு.

உடனே அத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அதன்பின்னர் ஏகப்பட்ட போட்டிக்கு நடுவில் ஒரு தலைவர் தேர்தெடுக்கப்பட்டார். தலைவரான உடனே அந்த எறும்புக்கு ஆணவம் வந்து விட்டது.

"எறும்புகளே! உங்களின் ஒரே தலைவன் நான்... கடவுளிடம் வரம் வேண்டி கொடுப்பது என் கடமை... எப்படியான வரம் வாங்கப் போகிறேன் என்பதை சற்று பொறுத்திருந்து பாருங்கள்" என்றது.

நீண்ட காலமாகத் தலைவன் எறும்பு தவம் இருந்தது.

ஒருநாள் கடவுள் காட்சி கொடுத்து "எறும்பே! உன் தவத்தை மெச்சுகிறேன். என்ன வேண்டும் கேள்" என்றார்.

உடனே எறும்பு; "**நான் கடித்தால் சாக வேண்டும்**" அவ்வளவு தான் கேட்டது.

"சரி தந்தேன்" என்று கடவுள் சொல்லி விட்டார்.

வரம் வாங்கியதில் எறும்புத் தலைவனுக்கு மிகவும் மகிழ்ச்சி.

இருந்தாலும் வாங்கிய வரம் பலிக்குதா என்பதை பரிசோதிக்க வேண்டுமல்லவா... யாரை கடிக்கலாம் என்று யோசனை செய்தது.

எதிரில் வரம் கொடுத்த கடவுள் தான் நின்று கொண்டிருந்தார். அதுதான் வரம் வாங்கி முடிந்ததே... இனிமேல் இவர் எதற்கு... என்று யோசனை செய்தது.

உடனே அவரை ஒரு கடி கடித்தது.

அவர் "பட்"டென்று கையாலே ஒரு தட்டுத் தட்டினார். எறும்பு "அப்பாடா"வென்று கத்திக் கொண்டே வலி தாங்க முடியாமல் சுருண்டு விழுந்தது.

"என்ன இது? வரம் பலிக்கவில்லையே... நீங்கள் சாக வேண்டுமே... இப்போது நானல்லவா செத்து விடுவேன் போல இருக்கிறது?" என்று எறும்பு கூறியது.

கடவுள் சிரித்தபடி சொன்னார்;

"நீ என்ன வரம் கேட்டாய்; **நான் கடித்தால் சாக வேண்டும்** என்ற வரம் கேட்டாய்; தந்தேன். இப்போது நீ கடித்தாய்; சாகப் போகிறாய்" என்றார்.

இந்த எறும்பு எப்படி வரம் கேட்டிருக்க வேண்டும்?

"**நான் யாரைக் கடிக்கிறேனோ அவர்கள் சாக வேண்டும்**" என்று கேட்டிருந்தால் சரி. ஏன் அது அப்படி கேட்கவில்லை தெரியுமா?

ஆணவம்! ஆணவம் வந்தால் அறிவு மழுங்கி விடும்.

அப்படித்தான் இவ்வுலகில் வாழும் மனிதர்களாகிய எமக்கு சில நேரங்களில் அறிவு சரியாக செயற்படுவதில்ல்லை. மழுங்கடிக்கப் படுகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இந்தியன் வீட்டுத்திட்டத்தில் எம்மையும் இணையுங்கள்

## அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை

(மல்லாவி)

துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேறியுள்ள அரச உத்தியோகத்தர்கள் தமக்கு மீள்குடியேறியதில் இருந்து இன்று வரை எவ்விதமான அரச உதவிகள் உட்பட நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை என கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

வன்னி மாவட்டத்தில் நிரந்தரமாக மேற்படி பிரதேச செயலர் பிரிவுகளில் வசித்து இறுதிப் போரின் போது எமது வீடுகள் உட்பட உடமைகளையும் குடும்ப உறவுகளையும் இழந்து நாதியற்றவர்களாக செட்டிகுளத்தில் இருந்த நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்தோம்.

பின்னர் மீள்குடியேற்றத்தின் போது 12 கூரைத் தகரங்களும் 8 மரத்தடிகளும் வழங்கப்பட்டு குடியேற்றப்பட்டோம். இதன்பின்னர் எந்த விதமான அரச உதவிகளும் கிராம சேவகர்கள் எமக்கு வழங்கவில்லை.

பாதிக்கப்பட்ட நாம் அவர்களிடம் வினவியபோது,

தமக்கு மேலதிகாரிகளின் உத்தரவுக்கு அமைய அரச உத்தியோகத்தர்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்க முடியாது என கூறியுள்ளனர். தற்போது இந்திய அரசால் வழங்கப்படுகின்ற வீட்டுத்திட்டத்தில் எம்மையும் இணைத்து கொள்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த நிலையில் அதில் இருந்தும் நாம் தற்போது விலக்கப்பட்டுள்ளோம்.

எமக்கு நாள் சம்பளமாக 600 ரூபா தொடக்கம் 700 ரூபா வரைதான் வழங்கப்படுகின்றது.

எம்மை விட வருமானத்தில் கூடிய தினக்கூலி பெறுபவர்களுக்கு வெள்ள நிவாரணமும் வீட்டுத்திட்டங்களும் வழங்கும் போது அரச உத்தியோகத்தர்கள் என்ற காரணத்தால் எமக்கு வெள்ள நிவாரணம் கூட தரப்படவில்லை.

போரின் போது வீசப்பட்ட எறிகணைகள் அரச உத்தியோகத்தர்கள் என்று எம்மை விலக்கிச் சென்று தாக்கியதா? அரச உத்தியோகத்தர்களான பலர் மேற்படி பிரதேச செயலர் பிரிவுகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள எம்மை மட்டும் நிவாரணப்பணிகளிலும் உதவித் திட்டங்களிலும் விலக்கி விடுவது எமக்கு வேதனை அளிக்கின்றது.

எனவே, மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்தலாம் என்ற தங்களின் கொள்கையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் எங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3-15)

# அரிமாக்கழக பொங்கல் விழா

தீவக அரிமாக் கழகத்தின் பொங்கல் விழா நிகழ்வுகள் எதிர் வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் சித்திர ஞான வைரவர் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லயன்ஸ். கே.கங்கைவேணியன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா, லயன் சீமாட்டி ஜெயசோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 200 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 65 | 60-80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 300 | 200 | 280 |
| தக்காளி | 80 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 80 | 50 |
| கரட் | 100 | 80 | 140 | 140 |
| பூசணி | 30-40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 80-140 | 130 | 180 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 60-80 | 90 | 80 |
| பாகற்காய் | 130 | 160 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 130 | 170 | 160 | 150 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 140 |
| பீற்றூட் | -- | 80 | 150 | 120 |
| கறிமிளகாய் | 200 | 350 | 180 | 180 |
| முருங்கைக்காய் | 400 | 700 | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 180 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 8-15 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 30-40 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 100-120 | 150 | 150 | 140 |
| வெங்காயப்பூ | 200 | 210 | 60 | 80 |

# இராசி பலன்

11.01.2013
(மார்கழி 27, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
அமாவாசை பின்னிரவு 1.51 மணிவரை
பூராடம் பின்னிரவு 12.17 மணிவரை
இராகுகாலம் 11.03-12.33 மணிவரை
சுபநேரம் 6.33-8.03 மணிவரை
அமாவாசை விரதம்.

**மேடம்** ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், திடீர் பயணங்களால் அனுகூலமுண்டு, தந்தை வழி உறவினர் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** எதிர்பாராத வகையில் குடும்பத்தில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், போசன நன்மையுண்டு, கௌரவக்குறைவான நாள், இஷ்ட தெய்வத்தை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மிதுனம்** அபூர்வ சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சென்ற இடங்களில் கௌரவம், அந்தஸ்து கிடைக்கும், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**கடகம்** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தூரதேசச் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** ஆலய வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள், குடும்பத்தினரின் தேவைகளை நிறைவு செய்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**கன்னி** ரோகங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தில் நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வருவர், சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், தெய்வீக சிந்தனை மேலோங்கும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** விவாதங்கள் ஏற்படலாம், பண வரவு திருப்தி தரும், எடுத்த காரியங்கள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு** மனதில் இனம்புரியாத கற்பனைகள் குடிகொள்ளும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம்.

**மகரம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு, திட்டமிட்ட காரியமொன்றில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** எதிர்பாராத வகையில் புதிய வருமானங்கள் வந்து சேரலாம், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் குதூகல சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புண்டு.

**மீனம்** அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நன்மை கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை கிராமத்தில் 39 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை கிராமத்தில் உள்ள 39 குடும்பங்களுக்கு இந்தியன் வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பொன்னாலை பாபுஜி ஆரம்பபிள்ளை கல்வி அபிவிருத்தி நிலையத்தில் சங்கானைப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதன்போதே இந்தியன் வீட்டுத் திட்டம் வழங்குவதற்கு 39 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் வன்னியில் இருந்து வந்து மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டே இப்பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் முதற்கட்டமாகவே இப்பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இவ் இந்தியன் வீட்டுத்திட்டத்திற்கு குடும்ப நிலையில் அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி எஸ்.ஜெயக்குமார், ஈழமக்கள் ஜனநாயக கட்சி பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு தமது உறுதிப்படுத்தலுடன் மேற்படி பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-30)




## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை கரணவாய் அண்ணாசிலையடிப் பிரதேசம், மாலுசந்தி முதல் துலாக்கட்டு மடத்தடி வரையான பிரதேசம், சாமியன் அரசடி முதல் சம்மந்தர் கடை வரையான பிரதேசம், நயினாதீவு பிரதான வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் நாளை சனிக்கிழமை குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, நயினாதீவு பிரதான வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (அ-9)

# முரண்பட்ட இனங்களை இணைத்தால் நிரந்தர சமாதானம் பிறக்கும்

## யாழ்.ஆயர் தெரிவிப்பு

யுத்தம் இடம்பெறுவதற்கு காரணமான இன முரண்பாட்டை நீக்கி ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதா? என யாழ். ஆயரிடம் பிரான்ஸ் தூதுவர் திருமதி கிரிஸ்ரின் றொபின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டின் தூதுவர் திருமதி கிரிஸ்ரின் றொபின் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் ஒரு மணித்தியாலமாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் யாழ். ஆயர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பிலும் மக்களின் வாழ்வாதாரம் குறித்தும் அதிகளவில் கேட்டறிந்து கொண்டார். அத்தோடு இலங்கையில் யுத்தம் நடைபெறுவதற்கு காரணமாகயிருந்தது இனங்களுக்கிடையிலான முரண்பாடே. இருப்பினும் தற்போது யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்களைக் கடந்துள்ளது.

இந்நிலையில் இரண்டு இனங்களுக்கிடையிலும் ஒற்றுமையை ஏற்படுத்தி நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளிக்கும் வகையில் நான் கூறினேன். இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை ஏற்படுத்தும் செயற்பாடுகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவில்லை. முரண்பட்ட இரண்டு இனங்களையும் இணைக்கும் போதுதான் சமாதானம் நிரந்தரமானதாக மாற்றப்படும்.

மேலும் அரசியல் செயற்பாடுகள் சுதந்திரமாக முன்னெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்படுவதில்லை. உள்ளார்ந்த ரீதியாக பல பிரச்சினைகள் உள்ளன. ஒற்றுமையைப் பலப்படுத்தும் மதச் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவதில்லை போன்ற பல விடயங்களை எடுத்துக் கூறியிருந்தேன் என்றார் ஆயர். (அ-6)




# ஆயிரத்து 502 பேருக்கு சட்ட ஆவணங்கள்

(பண்டத்தரிப்பு)

ஓபர் சிலோன் அனுசரணையுடன் வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் நடைபெற்ற சட்ட ஆவணங்களை வழங்கும் நடமாடும் சேவையில் ஆயிரத்து 502 பேர் பயனடைந்துள்ளதாக சங்கானை பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

மேற்குறித்த பிரதேச செயலகத்திற்குட்பட்ட 25 கிராமங்களின் வீடுகளுக்கு பட்டதாரி பயிலுநர்கள் சென்று விபரங்களைத் திரட்டி கிராம சேவகர்களின் உதவியுடனேயே இந் நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ஆயிரத்து 141 பேருக்கு தேடி எடுத்துக் கொடுக்கப்பட்டது. காலங்கடந்த பிறப்பு பதிவு பத்திரம் 103 பேருக்கும் 59 பேருக்கு திருமணப்பதிவு பத்திரமும் 4 பேருக்கு மரணச்சான்றிதழ் பத்திரமும் வழங்கப்பட்டன.

96 பேருக்கு உத்தேச வயதுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்தியாவில் பிறந்து இலங்கையில் குடியுரிமை பெற்ற 2 பேருக்கு இலங்கை குடியுரிமை பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டது. இறந்து மரணச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத 5 பேருக்கு காலங்கடந்த மரணச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

சட்ட ரீதியாக திருமணப்பதிவு மேற்கொள்ளப்படாத 92 பேருக்கு திருமணப்பதிவு மேற்கொள்ளப்பட்டு திருமணச்சான்றிதழ் வழங்கப்பட்டது. மேற்படி நடமாடும் சேவையானது இப்பகுதியில் முதற்தடவையாக நடத்தப்பட்டதுடன் 2 ஆம் கட்ட நடமாடும் சேவையானது அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளதாகவும் பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-30)


# வடமராட்சி கிழக்கில் கனமழை; மக்களின் இயல்பு நிலை பாதிப்பு


(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேசமெங்கும் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவது,

போக்கறுப்பு தொடக்கம் மாமுனை வரைக்குமான பிரதேசமெங்கும் மழை நீர் வீடுகளுக்குள்ளும் மற்றும் வீதிகள் எங்கும் நிறைந்து காணப்படுகின்றது. யாழ்.குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து வடமராட்சி கிழக்கு நோக்கி பயணிக்கும் பயணிகள் பேருந்து மற்றும் ஏனைய வாகனங்கள் என்பன வீதிகளில் உள்ள மழை வெள்ளத்தினால் வீதிகளில் புதையுண்டு காணப்படுகின்றது.

இதனைவிட கிராமங்களில் உள்ள மக்கள் அவர்களது வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளமையால் உணவு கூடத் தயாரிக்க முடியாமல் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அடுத்து இந்தப் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளும் இறந்துள்ளன. (அ-3-64)





வடமாகாணத்தில் அரச சார்பற்ற நிறுவனத்தினால் இவ் ஆண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது. இதில் ஆளுநர் உரையாற்றுவதையும் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி உட்பட கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் அமர்ந்து இருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் அதிகாரத்தை பரவலாக்க அரசாங்கம் விரும்பவில்லை

## ஐ.ம.மு. உப பொதுச்செயலாளர்

(கொழும்பு)

திவிநெகும சட்டமூலத்தை அவசர அவசரமாக பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் நிறைவேற்றிய அரசாங்கம் ஏன் தமிழ் மக்களுக்கு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றி அதிகார பரவலாக்கலை வழங்க பின்னிற்கின்றது என்று கேள்வி எழுப்பியுள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் உப பொதுச் செயலாளர் எஸ்.குகவரதன், அதிகாரத்தை வழங்காது வடபகுதியை இராணுவ மயமாக்கும் திட்டத்தையே முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

திவிநெகும சட்டமூலத்தால் மாகாண சபை அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. எனவே இது தொடர்பில் உயர் நீதிமன்றம் சென்று அதன் பரிந்துரைகள் பெறப்பட்டு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பிரச்சினையால் நாட்டில் சட்டத்துறைக்கும் சட்டவாக்கல் சபைக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றின. ஆனால் அரசாங்கம் பிடிவாதமாக திவிநெகும சட்டமூலத்தை மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி நிவைவேற்றிக் கொண்டது.

அதிகாரமற்ற மாகாண சபையையே அரசு வடக்கில் புகுத்த முனைகின்றது. இதன் மூலம் தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை வழங்க முடியாது என்று நிலைப்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

வடபகுதி தமிழ் மக்களுக்கு மாகாண சபை முறைமையை வழங்கி 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றி அதிகாரத்தை பரவலாக்கி தமிழ் மக்களுக்கு சிவில் நிர்வாகத்தை வழங்க அரசாங்கம் விரும்பவில்லை.

வடக்கில் இராணுவ மயமாக்கலை ஏற்படுத்தி தமிழ் மக்களை அடிமைகளாக வைத்திருக்கும் திட்டத்தையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. யுத்தம் முடிந்து விட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது. நாட்டில் சமாதானம் ஏற்பட்டுவிட்டது என அரசாங்கம் தெரிவிக்கின்றது.

அப்படியானால் ஏன் தமிழ் மக்களுக்கு சிவில் நிர்வாகத்தை வழங்க அரசாங்கம் மறுக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகளால் இனங்களுக்கிடையே எவ்வாறு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

13 ஆவது திருத்தத்தை பாதுகாத்து தமிழ் மக்களுக்கு அதிகார பரவலாக்கலை வழங்கி வடக்கு கிழக்கு தமிழ் மக்களை அடிமைத் தனத்திலிருந்து மீட்டெடுக்கும் தார்மீகப் பொறுப்பு இந்தியாவிற்கு உள்ளது. எனவே இவ்விடயத்தில் இந்தியா அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## 94 தாய்வான் பிரஜைகள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இணையத்தளம் மூலம் நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 94 தாய்வான் பிரஜைகள் நேற்று முன்தினம் நாடுகடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதமளவில் குறித்த நிதிமோசடிக்குற்றச்சாட்டின் பேரில் 100 பேர் இலங்கை மற்றும் சீன பொலிஸாரால் இலங்கையில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 74 ஆண்களும் 26 பெண்களும் அடங்குவதாகவும் இதில் 94பேர் தாய்வானைச்சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தொண்ணூற்று நான்கு தாய்வான் பிரஜைகளே மேற்படி நாடு கடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## இணைப்பாளர் விபரம் கோரப்படுகின்றது

(மல்லாவி)

தொழில்நுட்ப பாட இணைப்பாளர் விபரத்தினை வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள 12 கல்வி வலயங்களில் இருந்தும் கோரியுள்ளார்.

III ஆம் தொகுதி பாடங்கள் மற்றும் தொழில்நுட்ப பாடங்களில் அடங்குகின்ற மனைப் பொருளியல், கடல்வளமும் உணவுத் தொழில்நுட்பமும் தொடர்பாடலும் ஊடகமும் கற்கை, வடிவமைத்தலும் தொழில் நுட்பமும் இலத்திரனியல் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் செய்முறை தொழில் நுட்பத் திறன்கள் ஆகிய பாடங்களின் கல்வி விருத்திக்கு பொறுப்பாக தங்கள் வலயத்தில் கடமையாற்றும் இணைப்பாளர்களின் விபரங்கள் இணைக்கப்பட்ட மாதிரிக்கு அமைவாக தகவல்களை பூரணப்படுத்தி எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் து.லெனின் அறிவழகன், உதவிக்கல்விப் பணிப்பாளர் (த.தொ.தொ) மாகாணக் கல்வித்திணைக்களம், மருதனார்மடம், சுன்னாகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

## 40 இலட்சம் ரூபாயுடன் ஹோட்டல் உரிமையாளர் தலைமறைவு

(கரவெட்டி)

வடமராட்சி உதய கதிர்காமம் பகுதியில் உள்ள முஸ்லிம் ஹோட்டல் உரிமையாளர் சுமார் 40 இலட்சம் ரூபாயுடன் தலைமறைவாகியுள்ளதாகப் பாதிக்கப்பட்ட நபர்கள் சிலர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவது,

முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் ஹோட்டல் ஒன்றை கடந்த இரண்டு வருடங்களாக அப்பகுதியில் நடத்தி வந்ததாகவும் பின் அங்கு பெருமளவான வாடிக்கையாளர்களைக் கவர்ந்த ஹோட்டலாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது.

இதனால் அதிகளவான மக்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட வர்த்தகர் அவர்களிடமிருந்து வட்டிக்குப் பணத்தைப் பெற்றுள்ளார். இதனால் அதிகளவான வட்டி வீதம் பெருகி வந்ததனால் அதை எதிர்கொள்ள முடியாத வர்த்தகர் வட்டிக்கு வாங்கிய பணத்துடன் தலைமறைவாகியுள்ளார்.

இதனால் பணத்தைக்கொடுத்த நபர்கள் குறித்த நபரின் ஹோட்டல் கட்டட உரிமையாளரிடம் சென்று தமது பணத்தை குறித்த நபரிடமிருந்து மீளவும் வாங்கித்தருமாறு வற்புறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக வட்டிக்குப் பணத்தைப் பெற்று அதை மீள செலுத்தமுடியாமையால் வர்த்தகர்கள் தலைமறைவாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-3-24)

## புலி ஆதரவாளர்களே ஷிராணிக்கும் ஆதரவு

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்களே பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக குரல் கொடுத்து வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி நிறுவனமான நீலகாந்தன் என்ட் நீலகாந்தன் நிறுவனம் தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேச நபர்களுக்காக நீதிமன்றில் ஆஜராகும் ஓர் சட்டத்தரணிகள் நிறுவனம் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளை பாராளுமன்றில் பாதுகாக்க முயற்சிக்கும் ஓர் பாராளுமன்ற உறுப்பினரான சுமந்திரன், பிரதம நீதியரசருக்காக குரல் கொடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜே.சீ.வெலியமுன. பாக்கியசோதி சரவணமுத்து. நிமல்கா பெர்னாண்டோ போன்றோர் வெளிநாட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு இவ்வாறு பிரதம நீதியரசருக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

புலி ஆதரவு டெசோ மாநாட்டில் கலந்து கொண்ட விக்ரமபாகு கருணாரட்னவும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு ஆதரவாக குரல் கொடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். புலி ஆதரவு தரப்பினர் நீதிமன்றிற்கும் பாராளுமன்றிற்கும் இடையில் பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 RC வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 1<br>உயரம்: 5'10"<br>கி.பா: 34<br>தகைமை/தொழில்:BBA, Programme Assistant தொ.இ: B -942 | பிறப்பு: 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5'<br>கி.பா: 28.75, 8இல் செவ்.<br>தகைமை/தொழில்:ACCA-Studing தொ.இ: G -961 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>உயரம்: 5'10"<br>கி.பா: 14<br>தகைமை/தொழில்: HNDA காசாளர் தொ.இ: B -965 | பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா:52.25, 4 இல் செவ்<br>தகைமை/தொழில்: சங்கீத ஆசிரியை (பட்டதாரி) தொ.இ: G -962 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா: 26.5<br>தகைமை/தொழில்: MBBS Doctor தொ.இ: B -956 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 3<br>உயரம்: 5'2"<br>கி.பா: 68, 7 இல் செவ்.<br>தகைமை/தொழில்: BA, MA, நூலகர் தொ.இ: G -964 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 62, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: BBA (கனடா PR) தொ.இ: B -963 | பிறப்பு: 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:சுவாதி<br>உயரம்: 5'3"<br>கி.பா: 13<br>தகைமை/தொழில்: A/L- ஜேர்மன்(விவாகரத்தானவர்)<br>எ.பா:-விவாகரத்தானவர் ஏற்கப்படும் தொ.இ: G -967 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஸானாவிடம் குழந்தையை ஒப்படைத்தது சவுதி தாயின் தவறு

## அமைச்சர் பௌசி குற்றச்சாட்டு

ரிஸானா நபீக்கிற்கு நிறைவேற்றப்பட்டுள்ள மரணதண்டனையானது முழுநாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்நிலையில் இவரின் மரணதண்டனை நிறைவேற்றத்துக்கு காரணமான சவுதி அரேபிய நாட்டுத் தாயாருக்கு சவுதி அரசாங்கம் உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலை மூதுரை சேர்ந்த ரிஸானா நபீக்கிற்கு சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் தனது அனுதாபத்தை வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ரிஸானா நபீக் குற்றமிழைத்திருப்பதாக கருதப்பட்டு மரணதண்டனை விதிப்புக்குள்ளானார். இது முழு நாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ரிஸானா ஒரு சிறுமியாவார்.

சிறுமியான அவரிடம் குழந்தையை பாராமரிக்கவென அவரிடம் ஒப்படைத்தமை அந்த தாயின் தவறாகும்.

தனது குழந்தையை அவர் எவ்வாறு ஒரு சிறுமியிடம் ஒப்படைக்க முடியும். இங்கு இந்த தாயும் குற்றமிழைத்துள்ளார்.

எனவே குறித்த தாயின்மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென சவுதிஅரேபிய அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (அ-2)

# ரிஸானாவின் ஜனாசா சவுதியில் அடக்கம்

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை பணிப்பெண்ணான ரிஸானா நபீக்கின் ஜனாசா அந்த நாட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

ரிஸானாவின் ஜனாசாவை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கோரிக்கை விடுத்தது.

எனினும் சவுதி சட்டத்திற்கு அமைய சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க முடியாதென சவுதி அரசு அறிவித்துவிட்டது.

இதனால் ரிஸானாவின் ஜனாசா சவுதியிலேயே அடக்கம் செய்யப்பட்டதாக இங்குள்ள இலங்கை தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது. (அ-2)

# ரிஸானாவை விடுவிக்க அரசாங்கம் முயற்சித்தது

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

ரிஸானாவை பாதுகாப்பதற்கு அரசாங்கம் இயன்றளவு முயற்சித்ததாக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

எந்த வகையிலாவது ரிஸானாவிற்கு மன்னிப்பு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் பல்வேறு வழிகளில் முயற்சித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சவுதி அரேபிய சட்டத்தின் அடிப்படையில் சிசுவின் பெற்றோரினால் மட்டுமே மன்னிப்பு வழங்க முடியும் என்பதால் முயற்சிகள் தோல்வியடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரிஸானாவின் தந்தைக்கு இந்தத் தண்டனை குறித்து அறிவிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சுகயீனம் காரணமாக ரிஸானாவின் தந்தை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் ரிஸானாவின் உயிரை காப்பாற்ற தவறியதற்கான முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஏற்க வேண்டும் என ஆசிய மனிதவுரிமை ஆணையகம் குறிப்பிட்டிருந்தது. (அ-2)

# போலி வைத்தியர்களை காட்டிக் கொடுக்க முடிவு

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

நாட்டில் செயற்பட்டு வரும் போலி வைத்தியர்கள் குறித்த தகவல்களை பொலிஸ்மா அதிபருக்கு வழங்க அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து பேச்சுவார்த்தை இடம்பெறும் என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் நவின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் 40 ஆயிரம் போலி வைத்தியர்கள் செயற்பட்டு வருவதாகவும் இதனால் நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

போலி வைத்தியர்களை தண்டிக்கவென காணப்படும் சட்ட ஏற்பாடுகள் குறைவு என்பதால் இது குறித்து பொலிஸ்மா அதிபருக்கு தெளிவுபடுத்தவுள்ளதாக சங்கம் கூறியுள்ளது.

போலி வைத்தியர்களை குறைந்தது ஐந்து வருடங்களாவது சிறை வைக்க வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது பெய்துள்ள தொடர்மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் ஏற்பாட்டில் ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதனினால் இந்த உதவிப் பொருட்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

வெள்ளப் பெருக்கினால் 13 குடும்பங்களைச் சேர்ந்த 43 பேர் இந்தப் பகுதியில் பாதிப்படைந்துள்ளனர். அத்தோடு தமது வீடுகளை விட்டு வெளியேறி அப்பகுதியிலுள்ள முன்பள்ளியில் தங்கியுள்ளனர்.

இந்தப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிப் பொருட்களில் பால்மா, உலருணவுப் பொருட்கள் என்பன உள்ளக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, கிளிநொச்சி யூனியன் குளம் குடியிருப்பு பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஊடாக லங்கா சிறி நிறுவனம் நேற்று முன்தினம் உதவிகளை வழங்கியுள்ளது.

கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.குகராசா தலைமையிலான குழுவினர் வழங்கியுள்ளனர்.

வன்னியில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக குளங்கள் நிரம்பி வான் பாய்கின்றன. அநேகமான வீதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளதோடு போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# பொறுப்பெடுத்த மாடுகளை விரைவில் ஒப்படையுங்கள்

## கேப்பாபிலவு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)


கேப்பாப்பிலவு கால்நடை சங்கத்தினால் பொறுப்பெடுக்கப்பட்ட மாடுகள் மீளவும் முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை என மீள்குடியமர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லை.மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கேப்பாபிலவு கிராமத்தில் உள்ள மாடுகளையும் வேறு கிராமத்து மாடுகளையும் கேப்பாபிலவு கால் நடை சங்கம் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொறுப்பெடுத்தது.

ஆனால், தற்போது கேப்பாபிலவு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் தங்களது மாடுகள் முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகி மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் தமக்குரிய மாடுகளை தந்துதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே ,உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன்நடவடிக்கை எடுத்து தம்மிடம் மாடுகளை ஒப்படைக்க ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-3-267)



சிவஸ்ரீ சபாவாசுதேவக் குருக்களின் விரத மஞ்சரி காணொளி இறுவெட்டு வெளியீட்டு விழாஅண்மையில் சித்தன்கேணி சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இறுவெட்டில் அமையப்பெற்றுள்ள தோத்திரங்களைப் பாடிய மலேசியா பிரம்மஸ்ரீ சந்தான கோபால குருக்கள் சைலேந்திர சர்மாவிடமிருந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. மேற்கு பிரதேச தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலய செயலாளர் சி.மயூரன் ஆகியோர் இணைந்து இறுவெட்டு அடங்கிய காளஞ்சிப் பிரசாதத்தைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (படம்:-சித்தன்கேணி செய்தியாளர்)

# 50 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத வீதி

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்தை கிராமத்தின் மாதிரி கிராம வீதியானது 50 வருடங்க ளுக்கு மேலாக புனரமைக்கப்படாமையினால் பயணிக்க முடியாத நிலையில் உள் ளது.

மேற்படி வீதியானது 11/2 கிலோ மீற்றர் தூரங்கொண்ட வீதியாக காணப்படுவதுடன் குன்றும் குழியுமாக காணப்படுகின் றது.

இவ்வீதியானது முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமானதாகும்.

இவ்வீதியால் தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்களும் பயணிகளும் பயணிக்கின்றனர்.

எனவே, உரியதரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவு மாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# லொறி பள்ளத்தில் வீழ்ந்தது! 25 பேர் பலி; 10 பேர் படுகாயம்

பீகாரில் அறுவடைக்காக வேலை ஆட்களை லொறியில் ஏற்றிச்சென்ற போது ஏற்பட்ட விபத்தில் 25 பேர் பலியாகிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பீகாரின் அவுரங்காபாத் மாவட்டத்தில் உள்ள டிடைய பிகா கிராமத்தில் அதிவேகமாக வந்த லொறி வளைவில் திரும்பிய போது அருகில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் சுமார் 25 பேர் பலியாகியுள்ளனர்.மேலும் 10 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அவுரங்காபாத்தில் இருந்து அறுவடைக்காக் வேலை ஆட்கள் 35 பேரை ஏற்றி வந்த போது இவ்விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க உளவு அமைப்புகளின் ஆட்சிக்கவிழ்ப்பு வலைக்குள் இலங்கை....?

இலங்கையில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு வெளிநாடுகள் சதி செய்வதாக கூறும் அரசாங்கத் தரப்பு ஒருபோதுமே அத்தகைய சதி முயற்சியில் ஈடுபடும் நாடு அல்லது தரப்பு எது என்பது வெளிப்படுத்தியது கிடையாது. போர் தீவிரமாக நடந்துகொண்டிருந்தபோது அதை நிறுத்துமாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டபோதும் அரசாங்கம் இவ்வாறுதான் வெளிநாட்டுச் சதி என்றது. போர் முடிந்த பின்னர் போர்க் குற்ற விசாரணைகள் பற்றிய விவகாரம் சூடு பிடித்தபோதும் அவ்வாறே



கூறப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்கள் தீவிரம் பெற்றபோதும் மனித உருமைகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் இலங்கைக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டபோதும் ஜெனீவாவில் தீர்மானம் முன்வைக்கப்பட்டபோதும் இதே ஆட்சிக்கவிழ்ப்பு சதி என்ற குற்றச்சாட்டை அரசாங்கம் முன்வைத்தது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சர்வதேச அரங்கில் தமக்குச் சாதகமற்ற சூழல் எப்போதெல்லாம் ஏற்படுகிறதோ, உள்நாட்டில் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வு எப்போதெல்லாம் அதிகரிக்கிறதோ அப்போதெல்லாம் இந்த வெளிநாட்டு சக்திகளின் ஆட்சிக்கவிழ்ப்பு சதி முயற்சி என்ற விவகாரத்தை கையில் எடுத்துக் கொள்கிறது. தற்போதும் அத்தகையதொரு சூழலில்தான் இந்தக் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது. அரசாங்கம் கூறுவது போன்று இலங்கையில் ஆட்சியைக் கவிழ்க்கும் தேவை உலகின் எந்தவொரு நாட்டுக்கும் இருப்பதாகத் தோன்றவில்லை.

அத்தகைய ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற திட்டமிடக் கூடிய நாடுகள் என்றால்- அதற்கான திட்டத்தை நிறைவேற்றக்கூடிய நிலையில் உள்ள நாடுகள் என்றால், உலகில் இப்போது இருப்பது இரண்டே இரண்டு நாடுகள்தான்.

ஒன்று அமெரிக்கா.

இரண்டவது இந்தியா.

இந்த இரண்டு நாடுகள் தவிர, வேறு எந்தவொரு நாட்டினாலும் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியை மேற்கொள்ளவும் முடியாது. அதற்கான புறச்சூழலும் இல்லை.

ஆனால், அமெரிக்காவோ அல்லது இந்தியாவோ, இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்ள வேண்டிய சூழல்- அதற்கான தேவைப்பாடு இப்போது இல்லை என்பதே உண்மை.

சிரியாவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு அமெரிக்கா வெளிப்படையாகவே ஆதரவு தெரிவிக்கிறது. வெனிசுவேலா, கியூபா போன்ற பலநாடுகளில் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகளில் அது இரகசியமாகவே ஈடுபடுகிறது. அதுபோன்றதொரு சூழலில் இலங்கை இல்லை.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அமெரிக்காவின் சொல்லுக்கு முழுமையாகக் கட்டுப்படாது போனாலும் சிரியாவின் அசாத்தைப் போலவும் கியூபாவின் பிடெல் சகோதரர்களைப் போலவும் வெனிசுவேலாவின் சாவேஸைப் போலவும் மஹிந்த ராஜபக்ஷ ஒன்றும் எல்லா விடயங்களுக்கும் அமெரிக்காவுடன் முரண்டு பிடிக்கும் ஒருவராக இல்லை.

உள்நாட்டில் அமெரிக்காவுக்கு எதிரான கருத்துக்களை அவரும் அவரது அரசாங்கமும் தெரிவித்தாலும் அமெரிக்காவுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ போனால் அவர் அது பற்றி வாய் திறப்பதில்லை. அதுபோலவே சீனாவுடன் உள்ள நெருக்கம் காரணமாக இலங்கையை சிரியா, கியூபா, வெனிசுவேலா போன்ற நாடுகளின் வரிசையில் அமெரிக்கா வைத்துக் கொள்ளவும் இல்லை. ஒருவிதமான உறவுகளை இலங்கையுடன் அது பேணி வருகிறது.

2010 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் சரத்பொன்சேகா ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டதாக குற்றம் சாட்டிய அரசாங்கம், அதன் பின்புலத்தில் அமெரிக்காவே இருந்ததாகவும் உறுதியாக நம்பியது. ஆனால், நடைமுறையில் அமெரிக்கா அந்த முயற்சியில் ஈடுபட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. அதேவேளை, அமெரிக்கா ஆட்சிக் கவிழ்ப்பை இலங்கையில் மேற்கொள்ளத் திட்டமிட்டால் அதற்குத் தாக்குப்பிடிக்கும் திறன் இலங்கை அரசுக்கு உள்ளதா என்பதும் கவனிக்கத்தக்கது. ஏனென்றால், அமெரிக்க உளவு அமைப்புகளின் ஆட்சிக் கவிழ்ப்பு, இரகசிய நடவடிக்கைகள் உலகப் புகழ்பெற்றவை. தமக்குச் சாதகமற்ற அரசாங்கங்களை கவிழ்த்துப் போடுவதில் அவை தமது திறமையை ஏற்கனவே நிரூபித்துள்ளன. ஆனாலும், அமெரிக்காவுக்கு சாதிக்க முடியாத ஒரு சவாலாக இருப்பது கியூபா மட்டும்தான்.

அமெரிக்க உளவு அமைப்புகளின் ஆட்சிக்கவிழ்ப்பு வலைக்குள் இலங்கை கொண்டு வரப்பட்டிருந்தால், அதை எதிர்கொள்வது ஒன்றும் சுலபமான காரியமாக இருக்காது. அடுத்து இந்தியா, பிராந்திய வல்லரசு, அயல் நாடு என்ற வகையில் ஆட்சிக் கவிழ்ப்பைத் தீர்மானிக்கக் கூடிய சக்தியாக இருக்கிறது. இந்தியாவின் வெளிநாட்டு உளவு அமைப்பான றோவும் இந்த விடயத்தில் அமெரிக்காவுக்கு சற்றும் சளைத்த ஒன்றாக இருக்கவில்லை.

தெற்காசிய அரசியலில் றோவின் செல்வாக்கு அதிகம். ஆனால், சீனாவுடனான நெருக்கத்தைத்தவிர, இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்ளும் அளவுக்கு இந்தியாவுக்கு தேவை ஏதும் கிடையாது. சீனா, பாகிஸ்தானுடன் கொழும்பு நட்புறவு கொண்டிருந்தாலும் அரசியல் இராஜதந்திர ரீதியாக முரண்பாடுகள் சில இருந்தாலும் அதை ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்கின்ற அளவுக்கு தீவிரமானதொரு விடயமாக இந்தியா பார்க்க வாய்ப்பில்லை.



ஒரு ஆட்சிக் கவிழ்ப்பினால் இலங்கையில் அரசியல் குழப்பநிலை உருவாவதை அல்லது உருவாக்கப்படுவதை இந்தியா விரும்பாது. அதுவும் விரைவில் நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கவுள்ள நிலையில் இந்தியா அத்தகைய ஆட்சிக் கவிழ்ப்புக்கு திட்டமிட வாய்ப்பில்லை.

ஆட்சிக் கவிழ்ப்பு என்பது இரண்டு வகையில் மேற்கொள்ளப்படலாம்.

ஜனநாயக ரீதியாக அரசுக்கு உள்ள பெரும்பான்மை பலத்தை இழக்க வைத்து, ஆட்சியைக் கவிப்பது முதலாவது.

பலாத்காரத்தின்மூலம் ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்துவது இரண்டாவது ரகம்.

இந்த இரண்டுக்குமான சூழல் இலங்கையில் இப்போது இல்லை.

ஜனநாயக ரீதியாக அரசின் பெரும்பான்மை பலத்தை உடைப்பது சாத்தியமில்லாத விடயம் என்பதுடன் அவ்வாறு அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தை உடைத்து விட்டாலும் இன்னொரு வலுவான ஆட்சியை அமைக்கக்கூடிய வல்லமை கொண்ட மாற்றுத் தலைமை கொழும்பில் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. ஆயுத பலத்தைக்கொண்ட ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சூழல் இலங்கையில் இல்லை.

சரத்பொன்சேகாவுடன் அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதுமட்டுமன்றி இப்போது மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு விசுவாசமானவர்களைக் கொண்ட படைத் தலைமைகளே அதிகாரத்தில் இருக்கும் நிலையில் இத்தகைய முயற்சியில் எவராலும் துணிந்து இறங்க முடியாது.

ஆக, ஆட்சிக்கவிழ்ப்புக்கான வெளிநாட்டு சதி என்பது இலங்கையில் ஒரு அரசியல் கோசமாகவே மாறியுள்ளது. இதன்மூலம் அனுதாபங்களை பெற்று உள்நாட்டு நெருக்கடிகளை சமாளித்துக்கொள்ளவும் சிங்கள தேசியவாதிகளின் நம்பிக்கையை சம்பாதித்துக் கொள்ளவுமே அரசாங்கம் முனைகிறது.


-ஹரிகரன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேஸ்புக் நிறுவனம் ஒவ்வொரு வருடமும் "ஹேக்கர்ஸ் கப்" என்றவொரு மிகப்பெரிய போட்டியை 2011 முதல் நடத்திவருகிறது. இதில் உலகின் எந்தப்பகுதியில் இருந்தும் யார் வேண்டுமானாலும் பங்குபெறலாம். வெற்றி பெறுபவர்களுக்கு மிகப்பெரிய பரிசும் பேஸ்புக் நிறுவனத்தில் நல்லதொரு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

இந்த ஹேக்கர்ஸ் கோப்பையை வெல்வதற்கு நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அது பேஸ்புக் இணையத்தளத்தின் குறிப்பிட்ட ஒரு தகவலை திருடவேண்டும். இந்தப் போட்டியில் கலந்துகொண்டிருப்பவர்கள்தான் இவர்கள்.



கூகுளின் சேவைகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டுவருகின்றது. ஏதாவதொரு விதத்தில் கூகுளை நாம் பயன்படுத்துகின்றோம். (கூகுள் தேடுபொறியாக இருக்கலாம், ஜிமெயில், குரோம், அன்ட்ராய்டாக இருக்கலாம்)
கூகுள் நமது ஏராளமான தகவல்களை நாள்தோறும் சேமிக்கிறது. படங்கள், வீடியோக்கள், தரவுகள் மற்றும் தேடுபொறி தகவல்கள். இத்தனையும் எங்கே சேமிக்கிறார்கள்? இங்கேதான்....

## Face Book இன் புதிய சேவை

பேஸ்புக் புதிதாக ஒரு சேவையை அறிமுகப்படுத்தவுள்ளது. அதாவது ஸ்மார்ட்போன்களில் பயன்படுத்தப்படும் பேஸ்புக் அப்ளிகேசன் மூலமாக" Voice Call செய்யலாம். இதற்கான வேலைகளில் பேஸ்புக் தீவிரமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சேவையானது தற்பொழுது கனடா நாட்டிலுள்ள ஸ்மார்ட்போன் பயனாளர்களால் மட்டுமே அனுபவிக்க முடியும். விரைவில் மற்ற நாடுகளுக்கும் அறிமுகப்படுத்தப்படும் எனத்தெரிகிறது.

இவ்வாறு "Voice Call" செய்யும் முறையை VoIP என்ற தொழில்நுட்பத்தின் மூலம் அறிமுகப் படுத்தியுள்ளது பேஸ்புக். இந்த முறை மூலமாக எந்த பேஸ்புக் நண்பருடனும் பேச முடியும்.

## தொழில் நுட்பத்தின் புதிய பரிணாமம்

தொடுதிரையின் மூலம் கணனிகளை இயக்கும் தொழில்நுட்பத்திற்கு அடுத்தபடியாக குரல் கட்டளைகள் மூலம் அவற்றினை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் புதிய பரிமாணத்திற்குள் காலடி எடுத்து வைத்துள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது விண்டோஸ் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட கணனிகளில் காணப்படும் அப்ளிக்கேஷன்களை செயற்படுத்துவதற்கு Responding Heads 4 எனும் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மென்பொருளினை கணனியில் நிறுவிக் கொண்டு நுணுக்குப்பன்னி (Microphone) மூலம் குரல் வழிக்கட்டளைகளை வழங்குவதன் ஊடாக ஏனைய அப்பிளிக்கேஷன்களை இயக்கக்கூடியவாறு காணப்படுகின்றது.

## USB 3.0 தொழில்நுட்பம் அறிமுகம்!


தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக இலத்திரனியல் சாதனங்களின் செயற்பாடு அதிகரித்து வருகின்றது. இதன் அடிப்படையில் கணனிக்கும் ஏனைய இலத்திரனியல் சாதனங்களுக்கும் இடையில் விரைவாக தரவுகளை பரிமாற்றுவதற்காக தோற்றம்பெற்ற USB தொழில்நுட்பமானது தற்போது மற்றுமொரு பரிமாணத்தை எட்டியுள்ளது.

அதாவது இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த USB 2.0 தொழில்நுட்பத்திற்கு பதிலாக அதிவேக தரவுப்பரிமாற்றம் கொண்ட USB 3.0 தொழில்நுட்பம் அறிமுகமாகியுள்ளது.

இதன் மூலம் சுமார் 5 Gbps தொடக்கம் 10 Gbps எனும் வேகத்தில் தரவுகளை பரிமாறிக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.




## சுற்றுலாப் பயணிகளை விண்வெளிக்கு அனுப்ப சுவீடன் திட்டம்



சுற்றுலா பயணிகள் மற்றும் ஆய்வாளர்கள், விண்வெளிக்குச் சென்று வர, சுவீடன் நாடு திட்டமிட்டு வருகிறது. இதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு நடந்து வருகிறது. ஐரோப்பா கண்டத்திலுள்ள சுவீடன் நாட்டில், கிரூனா என்ற பகுதியில், விண்வெளி பயணத்திற்கான ஆலோசனைகள் ஆரம்பமாகியுள்ளன. இப்பகுதி, சுவீடன் நாட்டின், ஆர்டிக் பகுதியை ஒட்டி, நோர்வே நாட்டின் எல்லை பகுதியில் அமைந்துள்ள குளிர் பிரதேசம். தலைநகர் ஸ்டாக்ஹோமில் இருந்து, 953 கி.மீ., தொலைவில் உள்ள இந்த குட்டி நகரம், நள்ளிரவில் சூரியன் தெரிவது, பனிக்கட்டிக்களாலான தங்கும் விடுதி, மனிதனை நாய்கள் இழுத்துச் செல்லும் வாகனங்கள் என, சுற்றுலா பயணிகளின் மனதை, அதிகளவில் கொள்ளை கொள்ளும் பகுதியாக இருந்து வருகிறது.

1957இல், ஆரம்பிக்கப்பட்ட ஐ.ஆர்.எப். என்ற ஆய்வு நிறுவனம் தான், விண்வெளிக்கு சுற்றுலா பயணிகளை அழைத்து செல்ல திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து, மையத்தின் இயக்குநர் கரீன் நில்ஸ்டாட்டர் கூறியதாவது:

விண்வெளிக்கு சுற்றுலா பயணிகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை அழைத்துச் செல்ல திட்டமிட்டு வருகிறோம். இதற்காக, கிரூனாவில் உள்ள விமான நிலையத்தை தேர்வு செய்துள்ளோம்.

ஏனெனில், விண்வெளி விமானத்திற்கு பிற விமானங்கள் மூலம் போக்குவரத்திற்கு பாதிப்பு வரக்கூடாது என்பதால் தான், இந்த விமான நிலையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்து, விண்வெளிக்கு விமானங்கள் மூலம், பயணிகளை அழைத்து சென்று வர உள்ளோம். வெறும் இரண்டு மணிநேரத்தில் சென்று வர முடியும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

"விண்வெளியில் அவர்கள் தங்களது எடை குறைந்து காணப்படுவது, அங்கிருந்து பூமியின் தோற்றம் போன்ற பல்வேறு வகையான அனுபவங்களை பெற இயலும். இந்த புதிய திட்டம் குறித்து, நாங்கள் பல்வேறு வகையான, ஆய்வுகளை நடத்தி வருகிறோம். ஒரு முறை பயணத்தில் ஒன்று முதல், ஆறு பயணிகள் மட்டுமே இடம் பெற முடியும்.

"பூமியில் இருந்து, 100 கி.மீ., அப்பால் சென்று, அங்கு பயணிகள் ஐந்து நிமிடங்கள் ஆய்வு செய்ய அனுமதிக்கப்படுவர்.


இந்த திட்டத்திற்கு பயன்படும் விமானங்களை, அமெரிக்காவில் உள்ள பல்வேறு தனியார் நிறுவனங்கள் தயாரித்து தர, தயாராக உள்ளன. இருப்பினும், எந்த வகை விமானம், எங்கிருந்து பெறுவது, பயண திட்டம், கட்டணம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசித்து வருகிறோம். இந்த திட்டத்தில், பத்தாண்டுகளில், 14 ஆயிரம் பயணிகள் பயணிப்பர் என, ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது...' - இப்படி அவர் கூறினார்.


## செயற்கை கைகள்

உலகின் அதிநவீன செயற்கை கைகள் தற்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த "டெர்மினேட்டர்" கைகள் அலுமினியம் மற்றும் அலாய் என்ற பொருட்களைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.


இதில் சென்சார் மற்றும் முன்னரே பதிவுசெய்யப்பட்ட 14 குறிப்பு முறைகள் உள்ளன. இவைகள் கணனியில் எழுத்துக்களை "டைப்" செய்யவும், சுட்டெலி போன்றவற்றை இயக்கவும் செய்கிறது. மேலும் இதில் பல சிறப்பம்சங்கள் உள்ளன.








## கோப்புக்களை சுருக்கும் WinZip, WinRAR, 7Zip

கணனியில் கோப்புக்களைக் கையாள்கையில், அவற்றைச் சுருக்குகிறோம். இதனால் அவற்றின் தன்மை கெடாமல், சேமிப்புச் சாதனத்தில் அது பதிவதற்கான இடம் குறைவாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. கோப்புக்களைச் (file) சுருக்கி அமைப்பதில் பலவகைத் தொழில் நுட்பங்கள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் பயனாளர்களிடையே பிரபலமாக இருப்பவை வின்ஸிப், வின் ஆர்.ஏ.ஆர் மற்றும் 7-ஸிப் (WinZip, WinRAR, 7Zip) ஆகியவைதான். இவற்றில் எது, எந்த வகையில் சிறப்பானது எனப் பார்க்கலாம்.

ஒரே கோப்பை(file), இந்த மூன்று தொழில் நுட்பத்திலும் பயன்படுத்திச் சுருக்கிப் பார்த்தால், இவற்றின் செயல் வேறுபாடு தெரியும். அப்படிப் பார்க்கும் போது, வின்ஸிப் மிக வேகமாக கோப்புக்களைச் சுருக்குகிறது.

இதற்காக செய்யப்பட்ட ஒரு பரிசோதனையில் குறித்த ஒரு கோப்பை வின்ஸிப் 86 நொடிகளில் சுருக்கியது. அதே கோப்பை சுருக்கித் தர வின் ஆர்.ஏ.ஆர் தொழில் நுட்பம் 181 விநாடிகள் எடுத்துக் கொண்டது. 7 ஸிப் 427 நொடிகள் பயன்படுத்தியது. இதே கோப்பை விண்டோஸ் 7 சிஸ்டத்துடன் தரப்பட்டுள்ள ஸிப் வசதியைப் பயன்படுத்திய போது 152 விநாடிகள் ஆனது. இதில் விண்டோஸ் சுருக்கும் வசதியான ஸிப் சுருக்கம், இரண்டாவது இடத்தில் இருந்தாலும், சில சிறப்பு குறியீடுகள் உள்ள கோப்பைச் சுருக்க இது மறுக்கிறது. எனவே அத்தகைய கோப்புக்களைக் கொண்டு இதன் செயற்பாட்டினை ஒப்பிட இயலவில்லை.

சுருக்கப்படும் கோப்புக்களின் அளவினை ஒப்பிட்டுப் பார்க்கையில், WinZip, WinRAR ஆகியவற்றைக் காட்டிலும் 7Zip மிகக் குறைந்த அளவில் கோப்புக்களைச் சுருக்குகிறது. ஆனால், அதிக நேரம் எடுப்பதால், WinRAR தொழில்நுட்பத்தையே பலரும் நாடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 11 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

...இந்தக் கட்டுரை எழுதப்படும் இந்த நாள்வரை இருபத்தொன்பது மில்லியன் சதுர கிலோ மீட்டருக்குக் கிழிந்து கிடக்கிறது ஓசோன்கூரை. பூமிக்கெதிரான புறஊதாக் கதிர்களின் படையெடுப்பு எளிதாகிவிட்டது; கிழிந்த கூரையைத் தைப்பதற்கு மாறாய் இன்னும் கிழிக்கவே எத்தனிக்கிறோம்.

ஆண்டுக்கு இருநூறு மில்லியன் டன் கார்பன் மோனாக்சைடும், ஐம்பது மில்லியன் தொன் ஹைட்ரோ கார்பனும் நூற்று ஐம்பது மில்லியன் தொன் சல்ஃபர்டை ஒக்சைடும் நூற்றுத் தொண்ணூறு மில்லியன் தொன் சாம்ப லும் காற்றில் கலந்து உடைந்த கூரையை மேலும் மேலும் உடைக்கின்றன.

மனிதன் கவலைப்படுகிறானோ இல்லையோ இந்த மாபெரும் ஆபத்தையெண்ணி மலைச் சிகரங்கள் மட்டும் தனித்தனியே அழுது கொண்டிருக்கின்றன.

கூடிக் கொண்டே [illegible]கிறது புவி வெப்பம். ஒரு டிகிரி வெப்பம் கூடியதற்கே மென்சிறகு கொண்ட சில பறவை இனங்களும் கம்பளித் தோல் கொண்ட சில விலங்கினங்களும் பூமியை விட்டேபோய்விட்டன.

புவிவெப்பத்தால் ஒருமணி நேரத்திற்கு ஓர் உயிரினம் அழிந்துகொண்டேயிருக்கிறது. இன்னும் மூன்றே மூன்று டிகிரி வெப்பம் கூடினால் போதும்; உலகின் முப்பத்து மூன்று விழுக்காடு விலங்கினங்கள் அழிந்து போகும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். அதை நம்பித் தீர்வதற்கான திட ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

ஆர்கன்சாஸ் மாநிலத்தில் தலைக்கு மேல் பறந்த ஐயாயிரம் பறவைகள் பொத்தென்று தரையில் விழுந்து செத்தொழிந்த காட்சியை இப்போதும் நீங்கள் பார்க்கலாம் இணையத்தில்.

பருவங்களை ஏமாற்றி திடீரென்று வெப்பம் கூடிப்போன ரஷ்யாவில் சூடு தாங்காமல் நீராடப்போன பலர் நீர்நிலைகளிலேயே செத்து மிதந்ததை உலகறியும்.

சரிந்து கிடந்த பருத்திப் பொதிகளைப்போல் விஸ்கான்சின் நகரத்தில் ஒரேநேரத்தில் இறந்து கிடந்தன சில நூறு பசுக்கள்.


மெக்சிக்கோ வளைகுடாவில் இறந்து கரையொதுங்கிய எண்ணற்ற பிராணிகளைக் கண்கொண்டு கலங்கியவள் நான்.

கடந்த நூற்றண்டுகளில் 160 கோடியிலிருந்து 650 கோடிக்குத் தாவியிருக்கிறது உலக மக்கள் தொகை. ஆனால், அதே காலப் பகுதியில் மனித குலம் இழந்திருக்கிறது- உலகச் சதுப்பு நிலக் காடுகளில் பாதியை.

களையும், சமன் செய்துகொள்ளும் சக்தி இதுவரை இருந்தது மண்ணுக்கும் விண்ணுக்கும். இப்போது இரண்டுமே தங்கள் சக்திகளை இழந்து வருகின்றன.

துருவங்கள் உருகுகின்றன; பருவங்கள் மாறுகின்றன. காலங்காலமாய் விவசாயிகள் கொண்டிருந்த மரபுசார் அறிவை மறுதலிக்கிறது இயற்கை. விவசாயத்தையே பெரிதும் நம்பி வாழும் மூன்றாம் உலகநாடுகள் தங்கள் நிலங்களில் வேளாண்குடி மக்களே மடிந்து மக்கி உரமாவதைத் தடுக்க முடியவில்லை.

அவர்களின் வானம் இடம்மாற்றி வளர்ந்த நாடுகள் அகற்றிவிட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் உலகச் சங்கிலியில் ஒரு கண்ணி என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.



செவ்வாய்க் கிரகத்தில் மனிதனைக் குடியேற்றும் முயற்சி நடப்பதாய்ச் செய்தி வருகிறது. அதை நினைத்தால் நான் ஒரு கறுப்புப் புன்னகை சிந்த வேண்டியவளாயிருக்கிறேன். செவ்வாய்க் கிரகம் என்பது தொண்ணூற்றேழு விழுக்காடு கரியமிலவாயு கொண்ட வளிமண்டலத்தால் சூழப்பட்டிருப்பது. பூமி என்பது 0.03 விழுக்காடு கொண்ட கரியமிலவாயுவும் எழுபத்தொன்பது விழுக்காடு நைதரசனும் இருபத்தொரு விழுக்காடு பிராண வாயுவும் கொண்ட வளிமண்டலத்தால் சூழப்பட்டிருப்பது.

வைக்கப்பட்டுவிட்டது.

மண்ணை இராசாயனம் தின்றுவிட்டது.



எதை விட்டுவிட்டு எதில் குடியேறுவது?

இருக்கும் ரோஜாவை எரித்துவிட்டா, நீங்கள் முள்ளை முகர்ந்து பார்க்கப் போகிறீர்கள்? முதலில் நாமிருக்கும் பூமியை நாம் காப்போம். வானத்தைக் கிழிக்காத- காற்றைத் தொலைக்காத- பூமியை எரிக்காத வாழ்க்கை முறைக்கு மனிதகுலத்தை மாற்

நீர்நிலைகளைக் குடித்துவிட்டன சாயக் கழிவுகள்.

புவிவெப்பமாதல்- உலகமயமாதல் என்ற இரண்டு பூதங்களால் ஒரு விவசாயி ஒரேநேரத்தில் விழுங்கப்படுகிறான்.

அவன் வானிலையை வளர்ந்த நாடுகள் தீர்மானிக்கின்றன. அவன் உற்பத்திப் பொருளின் விலையை பங்குச் சந்தைகளும் தங்கச் சந்தைகளும் தீர்மானிக்கின்றன.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஒரு வேளாண்குடி மகனின் மதிப்பு ஓர் இறைச்சி ஆட்டின் மதிப்பை விடக் குறைவாகவோ சற்று அதிகமாகவோ இருக்கிறது.



தாங்க”

“மூலத்துக்குப் பக்கத்துல இருக்கு மொழிபெயர்ப்பு. அதுதான் பாராட்டறேன். பல பல்கலைக்கழகங்கள்ல இந்தக் கட்டுரை பேசப்படுது; எனக்கொரு யோசன தோணுது...”

“சொல்லுங்க அய்யா...”

“நம்ம பல்கலைக்கழகத்துல இந்திய வேளாண்மையில் உலகத்தாக்கம்ங்கற கருத்தரங்கு நடத்தப்போறோம். பொதுவா அதிகாரத்துல உள்ளவர்களையும் நன்கொடையாளர்களையும் சிறப்பு அழைப்பாளர்களா அழைக்கிறது ஒரு சடங்காகிப்போச்சு; அவங்களுக்குக் கருத்தரங்கத்தோட உள்ளீடே தெரியறதில்ல...”

“அய்யா... தெரியாதவங்களுக்குத் தெரியப்படுத்தறதுதான கருத்தரங்கு...?”

“உன் நகைச்சுவை உணர்ச்சியப் பாராட்டறேன். ஆனா இரசிக்கிற மனநிலையில நான்இல்ல- இந்தக் கருத்தரங்குக்குச் சிறப்பு அழைப்பாளரா விஷயமுள்ள ஒருத்தர அழைக்கலாம்னு நினைக்கிறேன்”

“யாருங்க...?”

“எமிலி- கட்டுரை எழுதின அமெரிக்கப் பெண்...”

“முயற்சி பண்ணலாம்.”

“நீதானே ஒருங்கிணைப்பாளர்! அந்த முயற்சிய நான் உன்கிட்ட ஒப்படைக்கிறேன். எப்படியும் வரவழைக்கணும். அந்தப் பெண் கலந்துக்கிட்டாக் கருத்தரங்குக்கே ஒரு கனம் கிடைக்கும்னு தோணுது. இதோ... இதுதான் அந்தப் பெண்ணோட இ...மெய்ல்...ஐ.டி. emily. global changer @ gmail.com”

அடுத்து சில நிமிடங்களில்...

பிரிக்கப்படாத பழைய மதுரை மாவட்ட எல்லைக்குட்பட்டதும் இன்றைய தேனி மாவட்டத்தில் அமைந்துள்ளதுமான அட்டணம்பட்டி என்ற ஊரைச் சேர்ந்த (நினைவில் வாழும்) சீனிச்சாமி பேரனும், கருத்தமாயி மகனுமான சின்னப்பாண்டி மின்னஞ்சல் செய்தான்- அமெரிக்காவின் அட்லாண்டா நகரத்தில் வசிக்கும் ஜேம்ஸ்டேவிட்- எலீனா தம்பதியரின் ஒரே மகளும் ஆய்வாளருமான இளம் பெண் எமிலிக்கு.

(தொடரும்)

# பூமியின் சிறப்புக் காப்புறுதி...?

இழப்பு என்பது பூமிக்கொன்றும் புதியதல்ல;

அழிவு என்பது மனிதகுலத்துக்கு அதிசயமும் அல்ல ;

ஆனால், அழிவுகளையும் இழப்புகளையும் சமன் செய்துகொள்ளும் சக்தி இதுவரை இருந்தது மண்ணுக்கும் விண்ணுக்கும். இப்போது இரண்டுமே தங்கள் சக்திகளை இழந்து வருகின்றன.

இழப்பு என்பது பூமிக்கொன்றும் புதியதல்ல;

அழிவு என்பது மனிதகுலத்துக்கு அதிசயமும் அல்ல ;

ஆனால், அழிவுகளையும் இழப்பு

ஓர் ஆய்வறிக்கை சொல்லும் தகவலின்படி 1997 முதல் 2011 வரை இந்தியாவில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை மட்டும் 2,14,500 பேர்.

ஒவ்வொரு பன்னிரண்டு மணி நேரத்திற்கும் ஒரு விவசாயி இந்தியாவில் தற்கொலை செய்துகொள்கிறான்.

இந்திய ஐதீகப்படி இவர்களனைவரும் விதிவந்து செத்தவர்கள் என்று விலக்கிவிட முடியாது. ஒரு மனிதனைத் தற்கொலைக்குத் தள்ளுவதும் பாதிக் கொலைதான்.

இனியேனும் மூன்றாம் உலக நாடுகளின் வான[illegible] கழுத்தில் [illegible]றிப் பார்ப்போம். வளர்ந்த நாடுகளுக்கு என் கட்டுரை சலிப்பைத் தரலாம். கட்டுரையை வாசிக்கும் பொழுது சிலர் கையில் கிடைத்த கண்ணாடிக் கோப்பையை என்மீது வீசலாம்; அதையே என் கட்டுரைக்கான வெற்றிக்கோப்பை என்று வீட்டுக்கு எடுத்துச் செல்கிறேன்”

- எமிலி


விதை வேளாண்மையில் முதுநிலைப் பட்டயப்படிப்பு பயிலும் சின்னப் பாண்டியைத் தன் அறைக்கு அழைத்தார் துணைவேந்தர் அருள்.

“மொழிபெயர்ப்பு நல்லாயிருந்தது சின்னப்பாண்டி- வாழ்த்துக்கள்”

“[illegible] ஆனா மொழிபெயர்ப்பு நல்லா இருந்ததுக்குக் காரணம் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநீதம்பிள்ளை இலங்கை வருவாரா? ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறது அரசு





யுத்தத்தின் பின்னரான நிலைமையை மதிப்பிட இலங்கைக்கு வருமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பை இன்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தின் சார்பில் இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளைக்கு 11 மாதங்களுக்கு முன்னர் அரசாங்கத்தினால் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது." இலங்கைக்கு வருவதற்காக அவர் விதித்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்ட போதிலும் அவரின் விஜயத்துக்கான திகதி அறிவிக்கப்படவில்லை.

நவநீதம்பிள்ளை தனது வருகைக்கு முன்னோடியாக விதித்த நிபந்தனைகள் இரண்டும் நிறைவேற்றப்பட்டு விட்ட போதிலும் அவர் தனது வருகை குறித்து இன்னும் பதிலளிக்கவில்லை என்றுமீ அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கடந்த வருடம் மார்ச் மாதம் எடுக்கப்படுவதற்கு முன்னர் நாம்ஓர்அழைப்பை அவருக்கு விடுத்திருந்தோம்.

இருப்பினும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி தனது அலுவலக அணியினரின் முதற்கட்ட விஜயம் இடம்பெற்ற பின்னர் தான் இலங்கை வந்தால் போதும் என நவநீதம்பிள்ளை கூறியிருந்தார் என ஜீ.எல்.பீரிஸ் கூறினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த 2011 ஆம் ஆண்டில் வெளியானது. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து தூதுக்குழுவொன்று இலங்கைக்கு சென்ற வருடம் செப்டெம்பரில் வந்து பார்த்து விட்டுப் போய்விட்டது.

ஆயினும் இலங்கைக்கு வருவதற்கான தனது விருப்பத்தை அவர் இன்றும் இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவிக்கவில்லை என அமைச்சர் கூறினார். இலங்கை வந்து முன்னேற்றங்களை நேரில் பார்க்கும்படி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு நாம் பலமுறை கூறி விட்டோம்.

அவர் முன்வைத்த நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு விட்டன. 2011 ஆம் ஆண்டு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் அவர் இலங்கைக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது இடம்பெறவில்லை என்று வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## போக்குவரத்து கட்டணம் அதிகமாக அறவிடப்படுகிறது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்கும் வவுனியாவில் இருந்து முல்லைத்தீவிற்கும் பயணிக்கும் தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் அறவிடப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

போரினாலும் இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களிடம் போக்குவரத்து கட்டடணத்தை அதிகமாக அறவிடுவது நியாயமா?

மேற்குறித்த இடத்திற்கான தூரம் 7 கிலோ மீற்றராக இருக்கும் போது 180 ரூபா அறவிடப்படுகின்றது.

அதேவேளை, வவுனியாவில் இருந்து கிளிநொச்சி செல்வதற்கான தூரம் 75 கிலோ மீற்றராக இருக்கின்ற போது 107 ரூபா அறவிடப்படுகின்றது.

எனவே, உரிய தரப்பினர் இவ் விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

## வவு.வில் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு நினைவு விழா

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட இந்து ஆலயங்கள் இணைந்து நடத்தவுள்ள சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு நினைவு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நா.சேனாதிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இறை பணிச்செம்மல் வை. தேவராசா திருமுறையோத வரவேற்புரையினை க.ஐயம்பிள்ளை நிகழ்த்துவார்.

தொடர்ந்து **வீர இளைஞர்களுக்கு விவேகானந்தர்** என்ற தலைப்பில் புளியங்குளம் இந்து கல்லூரி ஆசிரியர் பா.பாலசுந்தரம், **இந்து பெண்மணிகள்** என்ற தலப்பில் செம்மொழிச் செல்வி பண்டிதை யோகா சோமசுந்தரம், **மக்கள் சேவையே மகேசன் சேவை** என்ற தலைப்பில் ஆசிரியர் சி.வரதராஜன், **மத மாற்றம்** என்ற தலைப்பில் இலக்கியச்சுடர் ஐ.கதிர்காமசேகரன், **இந்து சமுதாய ஒற்றுமை** என்ற தலைப்பில் கலாநிதி தமிழ் மணி அகளங்கன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர். இறுதி நிகழ்வாக இந்து ஒற்றுமை கீதம் இடம்பெறும். (அ-9-266-250)

## சுகாதார நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தவும்

### அமைச்சர் றிசாத் பணிப்பு

(பூந்தோட்டம்)

வன்னி பிரதேசத்தில் நிலவும் சீரற்ற காலநிலையினையடுத்து ஏற்பட்டுள்ள சுகாதார பாதிப்புக்கள் மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் இருக்க கூடிய சுகாதார பணி களை முன்னெடுக்குமாறு வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரையினை வழங்கியுள்ளார்.

மழை வெள்ளம் குறைந்த போதும் தற்போது மீண்டும் மழையுடன் கூடிய காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் நோய் பரவும் அபாயம் இருப்பதாக தமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள அமைச்சர் றிசாத் பதியுதீன் வவுனியாவில் டெங்கு தொற்றல் குறித்தும் கவனம் செலுத்துமாறும் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு சுகாதாரம் குறித்த உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் பாடசாலை மாணவர்களுக்கு இது குறித்து விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார்.

நகர மற்றும் பிரதேச சபைகளின் எல்லைக்குள் நீர் தேங்கி நிற்கும் இடங்கள் குறித்து கவனம் செலுத்தி அவற்றை வழிந்தோடச் செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு நகர, பிரதேச சபைகளின் தலைவர்களிடம் வேண்டுகோளொன்றையும் அமைச்சர் முன்வைத்துள்ளார். (அ-9-266)

## இஸ்லாம் மதம் வலியுறுத்தும் மன்னிப்பு எனும் கொடையை வழங்க மறுத்தது சவுதி

### முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு

சவுதி அரேபிய அரசாங்கத்தினால் நேற்று முன்தினம் மதியம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக்கின் குடும்பத்தாருடன் பிரித்தானியாவிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பினர் கவலைகளை பகிர்ந்துள்ளனர்.

ரிஸானாவின் மரணச் செய்தி கேட்டு பிரித்தானியாவிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு விடுத்துள்ள அனுதாப மற்றும் உதவி கோரல் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு,

சவுதி அரேபிய அரசாங்கத்தினால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக்கின் குடும்பத்தாருடன் பிரித்தானியாவிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு கவலை கொண்டுள்ளது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்தவரான குறித்த சகோதரி 1988 ஆம் ஆண்டிலேயே பிறந்திருந்த போதிலும் இவரை சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாக அனுப்பிய வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் தனது ஒரு சில ஆயிரம் ரூபா பண வருவாய்க்காக 1982 இல் பிறந்தார் என போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து இவருக்குரிய கடவுச்சீட்டைப் பெற்று அனுப்பியிருந்தார்.

சவுதி அரேபியாவில் இச் சகோதரி பணி புரிந்த வீட்டில் 4 மாதக் குழந்தையொன்றைக் கொலை செய்ததாக இவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு 2005 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இச் சம்பவம் நடைபெற்றபோது சகோதரி ரிஸானா உண்மையில் 17 வயதுடைய சிறு பெண்ணாகவே இருந்துள்ளார். தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டையும் இவர் முற்றாக மறுதலித்து சாட்சிய ரீதியாக தான் இக்கொலையைச்செய்யவில்லை என்றும் வாதாடியிருந்தார்.

எனினும் கடவுச்சீட்டில் காணப்பட்ட போலியான பிறந்த திகதியின் அடிப்படையில் இவருக்கு சவுதி அரசாங்கம் மரண தண்டனையை விதித்திருந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட இவர் சவுதி அரேபியாவிலுள்ள தவாத்மி பகுதியில் அமைந்துள்ள சிறையில் இதுவரை காலமும் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

சம்பவம் நிகழும் போது இவரது உண்மையான வயதின் அடிப்படையிலும் சிறுவர் நலன் பேணும் வகையிலும் இவரது வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பத்தின் நிலவரத்தைக் கருத்திற் கொண்டும் இவருக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்யுமாறு உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் மனிதாபிமான அமைப்புக்கள் சவுதி அரசாங்கத்தைக் கோரி வந்தன.

மேலும் சவுதி அரேபிய அரசுக்கும் மன்னருக்கும் கருணை மனுக்களைச் சமர்ப்பித்திருந்தனர். அதேபோன்று உலக நாடுகளின் தலைவர்களும் இவ்வாறான கருணை விண்ணப்பங்களை விடுத்திருந்தனர்.

குறிப்பாக எமது இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு முறைக்கு இருமுறை தனது பிரஜையின் மீது கருணை காட்டுமாறு சவுதி அரசாங்கத்தையும் மன்னரையும் உருக்கமாகக் கேட்டிருந்தார்.

இஸ்லாம் வலியுறுத்தும் மன்னிப்பு என்கிற மாபெரும் கொடையை ஒரு ஏழைச் சிறுமிக்கு வழங்கி அதன் மகத்துவத்தை நிரூபிக்க இன்றைய சவுதி அரேபிய அரசாங்கம் மறுதலித்துள்ளதானது இஸ்லாத்தைப் பின்பற்றி வாழும் முஸ்லிம்கள் என்ற வகையில் எமக்கெல்லாம் கவலையாகவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின் இச்சகோதரியின் குடும்பத்தினருக்கு அனுப்பி வைப்பதற்கான உதவி திரட்டும் நடவடிக்கையொன்றை பிரித்தானியாவிலுள்ள முக்கிய நகரங்களில் குறித்த அமைப்பு மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த உதவும் கரங்கள் பணியில் பங்கேற்று நிதியுதவிகள் மற்றும் பொருளுதவிகள் வழங்கும் அனைவருக்கும் எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பினால் உரிய பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுவதுடன் அவ்வுதவிச் சேகரிப்பை இலங்கையிலுள்ள எமது மத்திய கிளை நிர்வாகத்தினர் ஊடாக சகோதரி ரிஸானா நபீக்கின் பெற்றோரிடம் நேரடியாகக் கொண்டு சென்று கையளிப்பதற்கான ஏற்பாடுகளையும் நாம் செய்துள்ளோம். இவ்வாறு நேற்றைய தினம் வெளியிடப்பட்ட அவ்வமைப்பின் உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## வீதியை ஊடறுத்து பாய்கிறது கழிவு நீர்

பரந்தன்- முல்லைத்தீவு பிரதான வீதியில் உள்ள விஸ்வமடு விவசாயிகளின் பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட கழிவு நீர் வாய்க்காலின் அகலம் போதாமையினால் கழிவு நீரானது வீதியை ஊடறுத்துப் பாய்வதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வாய்க்காலின் அகலம் போதாமையினால் கழிவு நீரானது வீதியை ஊடறுத்துப் பாய்வதால் துர்நாற்றம் வீசுகின்றது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்குளம் 4 கிராம பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கற்குளம் கிராம 4 இல் சட்ட விரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக கிராம ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். இவை தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வவுனியா மாவட்டத்தில் உள்ள கற்குளம் 4 குடியிருப்பு பகுதியில் போதைப் பொருளான கஞ்சாவிற்பனையும் விபசார செயற்பாடுகளும் இடம்பெறுவதாக கிராம ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

வேறு பிரதேசங்களில் இருந்து சைக்கிளில் வருபவர்கள் மறைத்துக் கொண்டு வரப்படுகின்ற கஞ்சாவை இக்கிராமத்தில் விற்கின்றனர்.

இதனால் இளைஞர்கள் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இதனால் பாடசாலை செல்ல வேண்டிய மாணவர்கள்பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் நகர பகுதியில் இருந்து வருகின்ற ஆண்கள் விபசாரத்திற்காக சில வீடுகளை பயன்படுத்துவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இக்கிராமத்தில் சண்டைகளும் இடம்பெறுகின்றன.

ஆகவே எமது கிராம மக்களையும் எமது சமூகத்தையும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் சமூக ஆர்வலர்களும் காப்பாற்ற வேண்டும் என கிராம மக்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-250)

# ஓரளவிற்கேனும் நிலவிவந்த ஜனநாயகத்திற்கும் ஆப்பு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நேர்மையான விசாரணைகள் நடத்தப்படக் கூடாது என்ற காரணத்தினாலேயே அவசரமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்ததனைத் தொடர்ந்து அவசர அவசரமாக ஒரே இரவில் ஆளும் கட்சியினர் அறிக்கை தயாரித்தனர் என்று ஜே.வி.பி.பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஓரளவிற்கேனும் நிலவி வந்த ஜனநாயகத்தையும் குழி தோண்டி புதைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஜனநாயக விரோத செயற்பாடுகளை அரசாங்கம் நியாயப்படுத்த முயற்சிக்கின்றது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை குறித்து மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கம் தனக்கு எதிரான சகல சக்திகளையும் விடயங்களையும் ஒடுக்கி ஆட்சி நடத்த முயற்சிக்கின்றது.

நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் சிலவே குற்றவியல் பிரேரணையை முன்வைப்பதற்கு ஏதுவாக அமைந்தது என்பது வெளிப்படையானது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளின் போது பிரதம நீதியரசரை அவமரியாதை செய்து அவரை வெளிநடப்புச் செய்யச் செய்தனர்.

மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் காட்டாத தீவிரத்தை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் அரசாங்கம் காட்டி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# குற்றவியல் பிரேரணையை எம்.பிகள் நிராகரிக்க வேண்டும்

## சர்வதேச நீதிபதிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச நீதிபதிகளுக்கான சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

பிரதம நீதயரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நேற்று ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை இலங்கையின் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.இதன்பின்னர் இன்று மாலை இதன்மீதான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த நிலையில் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது இலங்கையின் சட்ட ஒழுங்குக்கு பாரிய பாதிப்பை கொண்டு வரும் என்றும் சர்வதேச நீதிபதிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச நீதிபதிகள் சங்கம் 150 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதில் இலங்கையில் நீதித்துறைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (அ-2)

# சட்டக்கல்லூரி விவகாரங்களில் நான் தலையீடு செய்ய முடியாது!

## நீதி அமைச்சர் ஹக்கீம்

சட்டக் கல்லூரி விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாது என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு தொடர்பில் நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சட்டக்கல்லூரி நுழைவு தேர்வில் 78 முஸ்லிம் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதனால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. நுழைவுத் தேர்வில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தப் பிரச்சினையில் தலையீடு செய்ய முடியாது. சட்டக் கல்லூரி பரீட்சை விவகாரங்களில் நீதி அமைச்சு தலையீடு செய்வதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)




★ 1055-தியோடோரா பைசண்டைன் பேரரசியாக முடி சூடினாள்.

★ 1569-முதலாவது குலுக்குச் சீட்டு இங்கிலாந்தில் பதிவாகியது.

★ 1693-சிசிலியில் எட்னா எரிமலை வெடித்ததையடுத்து இடம்பெற்ற பெரும் நிலநடுக்கம் சிசிலி மற்றும் மோல்ட்டாவின் பல பகுதிகளை அழித்தது.

★ 1779-மணிப்பூரின் மன்னராக சிங்- தாங் கோம்பா முடிசூடினார்.

★ 1782-பிரித்தானியர் சேர் எட்வேர்ட் ஹியூஸ் மற்றும் சேர் ஹெக்டர் மன்றோ தலைமையில் திருகோணமலையை கைப்பற்றினர்.

★ 1787-யுரேனஸ் கோளின் இரண்டு துணைக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

★ 1805-மிச்சிகன் பிரதேசம் அமைக்கப் பட்டது.

★ 1851-சீனாவில் குயிங் அரசிற்கெதிராக ஹொங் க்சியூகான் என்பவர் தலைமையில் தாய்பிங் என்ற இராணுவக்குழு ஆரம்பிக்கப்பட்டது.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமா ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது.

★ 1878-முதற்தடவையாக பால் புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.

★ 1879-ஆங்கிலோ- சூளு போர் ஆரம்பமானது.

★ 1911-காம்ரேட் என்ற பத்திரிகையை விடுதலைப் போராட்ட வீரர் மவுலானா முகம்மது அலி கொல்கத்தாவில் வெளியிட ஆரம்பித்தார்.

★ 1922-நீரிழிவுக்கு மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் நெதர்லாந்தின் மீது போரை அறிவித்தது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கோலாலம்பூரைக் கைப்பற்றியது.

★ 1943-ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் சீனாவின் மீதான நில உரிமையை இழந்தன.

★ 1946-என்வர் ஹோக்ஸா அல்பேனியாவின் சர்வாதிகாரியாகத் தன்னை அறிவித்தது. அதனைக் குடியரசாக்கினார்.

★ 1957-ஆபிரிக்க உடன்பாடு டக்கார் நகரில் எட்டப்பட்டது.

★ 1962-பெருவில் இடம்பெற்ற சூறாவளி காரணமாக 4 ஆயிரம் பேருக்கு மேல் இறந்தனர்.

★ 1972-கிழக்கு பாகிஸ்தான் வங்களாதேசம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

★ 1998-அல்ஜீரியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1924-ரொஜர் கில்லெமின் நோபல் பரிசு பெற்றவர்

★ 1953-ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, இலங்கை அரசியல்வாதி (இ.2008)

★ 1973-ராகுல் திராவிட், இந்தியத் துடுப்பாட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1932-திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்ட தியாகி (பி.1904)

★ 1966-ல்லால் பகதூர் சாஸ்திரி, 3 ஆவது இந்தியப் பிரதமர் (பி.1904)

★ 1968-ஐசடோர் ஐசாக் ராபி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1898)

★ 1975-நீலவாணன், ஈழத்துக் கவிஞர் (பி.1931)

★ 1976-ஏரம்பு சுப்பையா, இலங்கையின் நடன ஆசிரியர்

★ 2008- எட்மண்ட் ஹிலாரி, நியூசிலாந்து மலையேறுநர் (பி.1919)

### சிறப்பு நாட்கள்

★ அல்பேனியா- குடியரசு தினம் (1946)

★ நேபாளம்- ஐக்கிய தினம்

### ஏரம்பு சுப்பையா



ஏரம்பு சுப்பையா இலங்கையின் புகழ் பெற்ற பரத நாட்டியக் கலைஞரும் ஆசிரியரும் ஆவார். இவர் கொக்குவில் கலாபவனம் நாட்டியப் பாடசாலை முன்னாள் அதிபர் ஆவார்.

#### வாழ்க்கைச் சுருக்கம்

ஏரம்பு சுப்பையாவின் தந்தை யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த அண்ணாவியார் கதிர்காமர் ஏரம்பு. இவர் தனது பரம்பரையின் ஆரம்பத்தில் கலையிலிருந்த ஈடுபாடு காரணமாகக் கூத்து வடிவத்தில் காவடி, இசை நாடகம் போன்றவற்றை நடத்தினார். அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் இந்தியக் கலைஞர்களை வரவழைத்து இலங்கை முழுவதும் கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்.

#### திரைப்படங்களில் நடனம்

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் குடும்பப்பெண்கள் அரங்கில் ஆடக்கூடாது என்ற நிலைமை. அதையெல்லாம் உடைத்து அந்த நேரத்தில் யாழ். நகரத்து பெரிய கல்விமான்கள் கலைஞர்களின் புதல்விகளுக்கு நடனக் கலையைக் கற்பித்து மேடையேற்றியதன் காரணமாக ஒரு மறு மலர்ச்சியை ஏற்படுத்தினார்.

#### நடனப் பள்ளி நிறுவல்

அரசாங்கப் பாடசாலை நடன ஆசிரியராக முதல் நியமனம் பெற்றவரும் சுப்பையாவேயாவார். நெடுந்தீவு மத் திய மகா வித்தியாலயத்தின் தனது ஆசிரியப் பணி யைத் ஆரம்பித்த அவர் பின்னர் மண்டைதீவு மகா வித் தியாலயம், வேலணை மகா வித்தியாலயம், கனகர த்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி), ஏழாலை மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் நடன ஆசிரியராகப் பணியாற்றினார்.

#### விருதுகளும் பட்டங்களும்

1960 ஆம் ஆண்டு யாழ். பிரதேச கலாமன்றம் இவருக்கு பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவித்தது. பின் கலைச்செல்வியினால் நடத்தப்பட்ட கலைவிழாவில் பொன்னாடை போர்த்தப்பட்டு கலைச்செல்வன் என்ற பட்டமும் அளித்துக் கௌரவிக்கப்பட்டார். அபிநய அரசகேசரி என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

#### மறைவு

இவர் 11.01.1976 இல் தனது 54 ஆவது அகவையில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்தராடம் 2, 3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும்!**

**நிதானத்தோடு செயற்பட்டால் நினைத்ததை எல்லாம் அடைய முடியும் என்று சொல்லும் மகர இராசி நேயர்களே!**

புத்தாண்டு பிறந்துவிட்டது. பொன்னவன் குருவின் பார்வை பதிகிறது. முத்தான சனியும் உச்சம் பெற்றிருக்கிறது. முழு நிலவாம் சந்திரனும் எதிரில் நிற்கிறார். அத்தனைக்கும் மேலாக செவ்வாய் ஆதிக்கம் செலுத்துகிறது உங்கள் இராசியில். அப்புறமென்ன? செய்யும் செயல்களில் வெற்றி, வையகம் போற்றும் வாழ்க்கையுடன் இந்த ஆண்டு உங்களுக்கு புகழையும் பொருளையும் வழங்கப்போகிறது.

மனதளவில் நல்லவர்களாக இருக்கும் நீங்கள் மற்றவர்களால்தான் மாற்றப்படுவீர்கள். பணத்தாசை உங்களுக்கு இல்லையென்றாலும் அப்போதைக்கப்போது தலைதூக்கும். கடமைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள். கண்டிப்பும் உங்களிடம் இருக்கும்.

இந்த புத்தாண்டில் உங்கள் இராசியை மே மாதம் வரை குரு பார்க்கிறது. அதன் பின்னர் 6 ஆம் இடத்துக்கு சென்று அங்கிருந்து கொண்டு விரயஸ்தானத் தை நல்லது.

ஆண்டின் தொடக்கத்திலேயே சுக ஸ்தானத்தில் கேது இருக்கிறார். 4 இல் கேது இருப்பது அவ்வளவு நல்லதல்ல. நடைமுறை வாழ்க்கையில் சில பிரச்சினைகளைக் கொடுக்கலாம். எனவே, முறையாக சர்ப்ப சாந்தியை செய்து இராகு- கேதுக்களை திருப்திப்படுத்துவது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் நாகஸ் தலங்களுக்குச் சென்று வழிபடுவது நல்லது.


எண்கணித அடிப்படையில் இந்த ஆண்டு சுக்கிரனுக்குரிய ஆண்டாக கருதப்படுகிறது. சுக்கிரன் உங்கள் இராசிநாதன் சனிக்கு நட்புக்கிரகம்தான்.

எனவே, உங்கள் பெயரை யோக எண் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு செயற்பட்டால் வருமானமும் சிறப்பாக இருக்கும். வளர்ச்சியும் கூடும்.

**01.01.2013 முதல் 27.05.2013 வரை**

இக்காலத்தில் குரு உங்கள் இராசியைப் பார்க்கிறார். அத்தோடு உங்கள் இராசிக்கு 9,11 ஆகிய இடங்களையும் பார்க்கிறார்.12 இற்கு அதிபதி வக்ரம் பெற்று பார்த்தாலும் நல்ல பலன்களே உங்களுக்கு நடைபெறும். இதுவரை இருந்த ஆரோக்கியப் பாதிப்புகள் இனி அகலும்.

அர்த்தாஷ்டம கேது வலிமையடைவதால் ஆரோக்கியத்தில் அதிக விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு தொல்லைகள் உருவாகலாம். இடமாற்றம், ஊர் மாற்றங்களை தவிர்ப்பது நல்லது. நீண்டதூரப் பயணங்களையும் தள்ளி



வைப்பதே நல்லது.

குரு, சுக்ர பார்வை இருப்பதால் பெண்வழி பிரச்சினைகள் உருவாகலாம். சகோதரிகளையும் தாயாதிவர்க்கத்தினர்களையும் அனுசரித்துச் செல்ல இயலாது. பணிகள் பாதியிலேயே நின்றுபோகும். பிணிகளும் தொல்லைகளும் உடலோடு ஒட்டிக் கொள்ளும். துணிந்து எதையும் செய்ய முடியாத விதத்தில் மனம் துவண்டு போகலாம்.

எதிரிகளால் ஏமாற்றம்! எதிர்பார்ப்புகள் நிறைவேறாத சூழ்நிலை, அமைதிக்குப் பங்கம் தரும் விதத்தில் வரும் செய்திகள், அலைச்சல் அதிகரிப்பு, உழைப்புக்கேற்ற பலன் இன்மை, உற்சாகக் குறைவு போன்றவைகள் உருவாகும். அவற்றைச் சீர்செய்து கொள்ள தெய்வ வழிபாடு கைகொடுக்கும்.

**சனி, செவ்வாய் பார்வை காலம்**

இந்த ஆண்டு 3 முறை மிக நீண்ட நாட்களுக்கு சனியும் செவ்வாயும் பார்த்துக் கொள்கிறார்கள். சனி, செவ்வாய் பார்வை சங்கடங்களைக் கொடுக்கும் என்பது நியதி. பணிகளில் தொய்வு, பக்கபலமாக இருப்பவர்களை அனுசரித்துச் செல்லாவிட்டால் அதனால் பாதிப்புகள் உருவாகலாம். மீன செவ்வாயின் சஞ்சாரத்தில் உடன் பிறந்தவர்களோடு போராட்டமும் மேட செவ்வாயின் சஞ்சாரத்தின் போது உடல் ஆரோக்கியத்தோடு போராட்டமும் உருவாகலாம்.

போராட்டமான வாழ்க்கை பூந்தோட்டமாக மாற அப்போதைக்கப்போது கிரகங்களை திருப்திப்படுத்த வழிபாடு செய்ய வேண்டும். எந்த முடிவெடுத்தாலும் பெரியவர்களைக் கலந்தாலோசிப்பது நல்லது. கணவன்-மனைவிக்குள் மூன்றாம் நபரின் தலையீட்டால் ஒற்றுமைக் குறைவு ஏற்படலாம்.

வீட்டு தகவல்களை வெளியில் சொல்லாமல் இருப்பதன் மூலமும்



# புத்தாண்டு பலன்கள் 2013

சிவல்புரி சிங்காரம்

மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பதன் மூலமும் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். கூட்டாளிகள் விலகாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனம். குறிப்பாக அங்காரகனுக்கு சிவப்பு மாலை அணிவித்து துவரையை தானம் கொடுப்பதோடு சனிக்கும் எள் தீபம் ஏற்றி வந்தால் சஞ்சலங்கள் தீரும்.

மகர இராசியில் பிறந்த உங்களுக்கு இந்த ஆண்டு மகத்தான ஆண்டுதான் என்றாலும் சுக ஸ்தானத்தில் அல்லவா கேது சஞ்சரிக்கிறார். எனவே, மருத்துவச் செலவு கூடும். நோய்கான அறிகுறி தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப்பெறுவது நல்லது. சுப விரயங்கள் அதிகரிக்கும். வீட்டிற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்வது ஒற்றுமையைப் பலப்படுத்தும். வருடத்தின் மையப் பகுதியில் புதியவர்களை நம்பி ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். உங்கள் பெயரில் இடம், பூமிகள் வாங்கும் பொழுது பத்திரப் பதிவுகளை சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

சனி, செவ்வாய் பார்வை காலத்தில் ஆஞ்சநேயர் வழிபாடுகளை செய்வது நல்லது. சுகஸ்தான கேதுவிற்கு பரிகாரமாக சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் மாறலாம். குடும்பச் சுமை கூடும் வருடமிது.

யும், சகாய ஸ்தானத்தையும் பார்க்கிறது. கையில் பணம் இருந்தால்தானே நாம் செலவழிக்க முடியும் என்று சொல்வோம். பணத்தை பல வழிகளிலும் வந்துசேர வைக்கும் சகாயஸ்தானத்தையும் குரு பார்க்கிறார். அதை உருப்படியான காரியத்திற்கு விரயம் செய்ய வைக்கும் விரயஸ்தானத்தையும் குரு பார்க்கிறார்.

எனவே, இந்த ஆண்டு வீட்டில் கெட்டிமேளம் கொட்டும் வாய்ப்பு உருவாகப் போகிறது. அதுமட்டுமல்ல, பெண் குழந்தைகளின் சுபச்சடங்கு நிகழ்ச்சிகள், பெற்றோர்களின் பிறந்த நாள் விழாக்கள் என்று பல சுப நிகழ்வுகள் நடைபெற்று மனதை மகிழ்விக்கப் போகிறது. சனிக்கிழமைதோறும் சனி பகவானை வழிபடுவதோடு வீட்டில் காலைநேரத்தில் வரும் காகத்திற்கு எள் கலந்த சாதத்தை வைப்பதன் மூலம் நல்ல பலன்களை காணலாம்.

இந்த புத்தாண்டில் சனி, செவ்வாயின் பார்வை ஏற்படும் காலத்தில் முன்னெச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது. சுகாதிபதியும் இராசிநாதனும் ஒன்றையொன்று பார்த்துக்கொள்ளும் பொழுது ஆரோக்கியத்தில் பாதி

கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். வராத பாக்கிகள் வசூலாகும். வளர்ச்சிக்கு வித்திட்டவர்களின் ஒத்துழைப்போடு வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முன்வருவீர்கள். கூட இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். கூடுதல் பொறுப்புகளும் பதவிகளும் அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு கிடைக்கும். வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள் சொந்தவீடு வாங்குவர். ஏதோ ஒரு வழியில் பணம் வந்து கடன் சுமை குறையும்.

தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்

## மகரம்



வது நல்லது. குழந்தைகளால் சில விரயங்கள் ஏற்படலாம். பத்தில் சனி, இராகு சஞ்சரிப்பதால் தொழில் ரீதியாக நல்ல வருமானம் வந்தாலும் நிம்மதி ஓரளவே கிடைக்கும்.

**28.05.2013 முதல் 31.12.2013 வரை**

இக்காலத்தில் குரு ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது நல்ல பலன்களைக் கொடுக்குமா? என்று நீங்கள் நினைக்கலாம். குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும், பார்க்கும் இடத்திற்குத்தான் பலன் அதிகம். எனவே, அங்கு இருக்கும் பொழுது மறைமுக எதிர்ப்புகள் வந்துகொண்டுதான் இருக்கும். முன்னெச்சரிக்கையாக உடலை பரிசோதனை செய்து கொள்வது நல்லது. எந்தக் காரியமும் கடைசி நேரத்திலேயே கைகூடும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

இதுபோன்ற காலங்களில் குரு பரிகாரங்களை முறையாக செய்ய வேண்டும். வியாழக்கிழமைதோறும் குரு தட்சிணாமூர்த்திக்கு முல்லைப் பூமாலை அணிவித்து, மஞ்சள் வஸ்திரம் சாற்றி, சுண்டல் நைவேத்தியம் கொடுத்து வழிபட்டு வந்தால் வந்த துயரங்கள் வாயிலோடு நின்றுவிடும். வானவர்க்கரசனான வ்ளம் தரும் குருவை தேனான செந்தமிழால் செவி

## இந்த ஆண்டு உங்களுக்கு வெற்றி, வையகம் போற்றும் வாழ்க்கையுடன் புகழையும் பொருளையும் வழங்கப்போகிறது

ப்பு ஏற்படலாம். அழகிய வீடு கட்டும் வாய்ப்பு பாதியிலேயே நிற்கலாம்.

சீரோடும் சிறப்போடும் இருந்த வாழ்க்கையில் திடீர் திருப்பங்கள் ஏற்படுவது கண்டு திகைப்படைவீர்கள். அக்காலத்தில் சனி, செவ்வாய் ஆகியவற்றுக்குரிய பரிகாரங்களையும் ஸ்தல வழிபாடுகளையும் செய்து கொள்வது

த்த மாற்றங்கள் வந்துசேரும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் நீண்டநாட்களாக கிடைக்கவில்லையே? என்று ஏங்கியவர்கள் இந்த புத்தாண்டில் கிடைத்து மகிழ்ச்சியடைவர். என்ன இருந்தாலும் இராகு, கேது பெயர்ச்சி வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

குளிர பாடினால் வாழ்நாளில் நல்ல சம்பவங்களை சந்திக்க நேரிடும். வருங்காலமும் வளமாக அமையும்.

**குருவின் வக்ர காலம்**

ஒருசில கிரகங்கள் ஒருசில நேரங்களில் வக்ர இயக்கத்தில் இருக்கும். வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது அவைகளால் திருப்தியான பலனை

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!**

வாரவழிபாடாக சனிக்கிழமைதோறும் சனீஸ்வரரை வழிபட்டு வருவது நல்லது. குடும்பஸ்தர்கள் ஜோடி தீபம் ஏற்றுவது நல்லது. அன்னதானம், வஸ்திரதானம் செய்யலாம்.


இயல்பான வாழ்க்கையில் இன்னும் நற்பலன்கள் கிடைக்க பிறந்த திகதி மற்றும் கூட்டு தொகைக்குரிய எண்களின் ஆதிக்கம் பார்த்து தெய்வ வழிபாட்டையும் சிறப்பு வழிபாட்டையும் மேற்கொண்டால் நினைத்த காரியம் நினைத்தபடியே நிறைவேறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# விருந்தாளிகள்



ரோஜா தன் பெற்றோருடன் அன்றுதான் புதிய வீட்டுக்கு வந்திருந்தாள். அம்மா வீட்டு பொருட்களை அட்டைப் பெட்டிகளில் இருந்து எடுத்து அடுக்கி வைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

ரோஜா ஒரு நாற்காலியை பல்கனியில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள். திடீரென யாரோ முனகும் சத்தம் கேட்டு ரோஜா அம்மாவைக் கூப்பிட்டாள்.

என்னடி வேண்டும்? ஏன் இப்படி கழுத்தையறுக்கிறாய்? என்றபடி சுகுணா பல்கனிக்கு வந்தாள். ரோஜா அந்த முனகல் ஒலியைக் காது கொடுத்துக் கேட்கச் சொன்னாள்.


இது ஏதோ பெண் புறாவின் குரல்! முட்டையிடப்போகிறது! அதனால் உண்டாகும் வயிற்று வலியினால் முனகுகிறது. மனிதர்களைப்போலவே அதற்கும் வயிறு வலிக்கும்! என்றாள் சுகுணா.

அம்மா! அம்மா! என்று கூச்சலிட்ட ரோஜா இதோ பாரம்மா ஷூ ரேக்குப் பின்னால் இங்கேதான் இருக்கிறது புறா என்று பல்கனிக்குள் ரேக்குக்கு மறு பக்கம் உட்கார்ந்திருந்த புறாவைக் காட்டினாள்.

அடக்கடவுளே! என்ற சுகுணா, அது இங்கே முட்டையிடப் பார்க்கிறது. அதை விடாதே! துரத்து இங்கிருந்து! என்று சொல்லி விட்டு தன் வேலையைப் பார்க்கச் சென்றாள். ஆனால் தாய்ப் புறாவைத் துரத்த ரோஜாவுக்கு மனம் வரவில்லை. நிறைய குச்சிகளைத் தரையில் பரப்பி கூடு கட்டியிருந்தது. புறாவைப் பார்த்தால் ரோஜாவுக்குப் பாவமாக இருந்தது.

அவள் எண்ண அலைகள் அந்தப்புறாவைச்சுற்றி வருகையில் இன்னொரு புறா அங்கு வந்து தாய்ப்புறாவின் அருகில் உட்கார்ந்தது. அதுதான் அப்பா புறாவோ என்று ரோஜாவுக்குத் தோன்றியது.

தவிர அக்கம்பக்கத்தில் நிறையப் புறாக்கள் அவ்விரண்டையும் சூழ்ந்துகொள்வதைப் பார்த்துக்கொண்டிருந்த ரோஜாவுக்கு



## அம்புலிமாமா கதைகள்

நேரம் போனதே தெரியவில்லை.

மறுநாள் காலை படுக்கையில் இருந்து எழுந்ததுமே ரோஜா முதலில் பல்கனிக்கு ஓடி வந்தாள். அங்கு அவள் எதிர்பார்த்தபடி தாய்ப்புறாவையும் கூட்டையும் காணவில்லை. அவளுக்கு பகீரென்றது. உடனே அவளுக்கு தன் தாய் மீது சந்தேகம் வர அம்மா என்று கத்தினாள். கூடு என்னவாயிற்று என்று உரக்கக் கத்தினாள்.

அதுவா என்று சுகுணா அலட்சியமாக கூட்டைக் கலைத்து அப்புறாவைத் துரத்தி விட்டேன் என்றாள். தொடர்ந்து அதை அப்படியே விட்டிருந்தால் முட்டையிட்டு குஞ்சு பொரித்து பல்கனியை அசிங்கப்படுத்தி விடும்.

இனி தாய்ப்புறா பயந்து கொண்டு இங்கு கூடு கட்டாது என்றாள். ரோஜா அப்படியே உடைந்து போனாள். அவள் மனதின் ஆழத்தில் அன்று முழுவதும் வலித்தது.


நண்பகல் பள்ளியிலிருந்து திரும்பிய ரோஜா ஏதோ ஒரு நப்பாசையில் பல்கனிக்குப் போக அங்கே அந்தப் புறா மீண்டும் கூடுகட்டி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். உடனே மகிழ்ச்சியில் கூச்சலிட அம்மா ஓடி வந்து பார்த்தாள்.

ஐயோ, தலைவிதியே! மறுபடியும் வந்துவிட்டதா என்று சுகுணா அதை விரட்ட முயல, ரோஜா தடுத்தாள்.

வேண்டாம் அதை விட்டு விடு! அது எப்படி முட்டையிடுகிறது. குஞ்சு பொரிக்கிறது என்று பார்க்க ஆசையாக இருக்கிறது. புறாக்குஞ்சுகளைப் பார்க்க வேண்டும். அவற்றுடன் விளையாட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது என்றாள் ரோஜா.

புறாவும் குஞ்சுகளும் பல்கனியை அசிங்கப்படுத்திவிடும் என்று சுகுணா மீண்டும் எதிர்ப்புத் தெரிவிக்க, வேண்டுமானால் பல்கனியை நான் தினமும் சுத்தப்படுத்துகிறேன்.

அதை விரட்ட மட்டும் செய்யாதே அம்மா! எல்லோரும் உன்னைப்போல் அதை விரட்டினால் அது எங்கு தான் முட்டையிடும். பறவை களும் நம்மைப் போல் ஜீவராசிகள்! அவற்றுக்கும் பூமியில் வசிக்க உரிமை



உண்டு என்று என் டீச்சர் சொன்னார் என்றாள்.

சரிதான்! உன் புறா மரத்தில் கூடு கட்டட்டுமே! நம் வீட்டுப் பல்கனியில் ஏன் கூடு கட்டி முட்டையிடவேண்டும் என்றாள் சுகுணா.

அதற்கு யார் காரணம்? அவை ஒழுங்காக மரத்தில்தான் கூடு கட்டின. நீ எல்லா மரங்களை யும் வெட்டி வீழ்த்தி வீடு கட்டிக் கொண்டே போனால் புறாக்கள் எங்கே போகும்? உன் வீட்டுக்குத்தான் கூடு கட்டவரும்.

உனக்கு வரவர வாய் அதிகமாகி விட்டது. இதைத்தான் ஸ்கூலில் கற்றுக்கொடுக்கிறார்களா? என்று சுகுணா கேட்கும் போது ரோஜாவின் அப்பா ராவ் உள்ளே நுழைந்தார்.

சரியாகத்தான் சொன்னாள் என் செல்லப்பெண்! என்று ரோஜாவைத் தட்டிக்கொடுத்த ராவ் குழந்தை சொல்வது நியாயம்தானே! நீ அவற்றின் வீடுகளைப் பறித்துக் கொண்டாய். அதனால் அவை வேறு இடமில்லால் உன் வீட்டுக்குள்ளேயே வருகின்றன. அவற்றைத் தடுப்பது நியாமல்ல என்றார்.

அப்பாவும் பெண்ணும் ஒரே கட்சியா? அப்போது நான் என்ன பேசமுடியும்? உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் என்று சுகுணா உள்ளே சென்று விட்டாள்.

அன்றுமுதல் ரோஜாவுக்கு மிக நன்றாகப் பொழுது போயிற்று. தாய்ப்புறா முட்டைகளிட்டு குஞ்சு பொரிக்க அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளிவருவதை அதிசயத்துடன் பார்த்தாள். பின்பு அவற்றுக்கு தினமும் உணவு ஊட்டுவதையும் குஞ்சுகள் பறக்க முயல்வதையும் கண்ணாரக் கண்டு ரசித்தாள். குஞ்சுகள் பெரிதாகி சிறகுகள் முளைத்து பறக்கும் வரை ரோஜாவுக்கு நாட்கள் சென்றதே தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்கள்,பிரதியமைச்சர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள்!

அமைச்சர்கள்,பிரதியமைச்சர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் தொலைபேசி கொடுப்பனவுகள், வாகனங்கள் மற்றும் அதற்காக வழங்கப்படும் எரிபொருள் தொடர்பான தகவல்களை பாராளுமன்றத்தில் அரசாங்கம் வெளியிட்டது.

இதன்பிரகாரம் அமைச்சரொருவருக்கு மாதாந்த சம்பளமாக 65 ஆயிரம் ரூபாவும் பிரதியமைச்சர் ஒருவருக்கு 63 ஆயிரத்து 500 ரூபாவும்வழங்கப்படுவதோடு அதற்கு மேல திகமாக தொலைபேசி கொடுப் பனவாக மாதமொன்றுக்கு ரூபா 50 ஆயிரமும் வாகனங்கள், அதற்கான எரிபொருளும் வழங்கப்படுவதாகவும் அரசு நேற்று முன்தினம் அறிவித்தது.

அமைச்சர் ஒருவருக்கும் பிரதியமைச்சர் ஒருவருக்கும் சம்பளத்திற்கு மேலதிகமாக இரண்டு அலுவலகத் தொலைபேசிகளுக்கான 20 ஆயிரம் ரூபாவும் கடமையின் நிமிர்த்தம் 2 வீட்டுத் தொலைபேசிகளுக்காக 20 ஆயிரம் ரூபாவும் கையடக்க தொலைபேசிக்கென 10 ஆயிரம் ரூபாவும் மொத்த கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

அத்தோடு 3 வாகனங்கள் மற்றும் மாவட்ட அடிப்படையில் அவற்றுக்கான எரிபொருள் போன்ற சலுகைகளையும் அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் அனுபவிக்கின்றனர்.

மேல்மாகாணத்திற்கு வெளியே அமைந்துள்ள மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களின் மற்றும் பிரதியமைச்சர்களின் பெற்றோல் வாகனமொன்றுக்கு 750 லீற்றரும் டீசல் வாகனமொன்றுக்கு 600 லீற்றரும் எரிபொருள் வழங்கப்படுவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதேபோன்று மேல்மாகாண மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் பெற்றோல் வாகனமொன்றுக்கு 600 லீற்றரும் டீசல் வாகனமொன்றுக்கு 500 லீற்றரும் எரிபொருள் வழங்கப்படுவதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதன் பிரகாரம் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கு மாவட்ட அடிப்படையில் வித்தியாசப்படும் எரிபொருள் கொடுப்பனவு 2 ஆயிரம் ரூபா, கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவு, பாராளுமன்றத்திற்கு வருகைக்கான 500 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படும். (அ-2)

## 18 கடற்படையினர் உயிர் தப்பினர்

(கொழும்பு)

கடற்படையினரை ஏற்றிக்கொண்டு பயணித்த பேருந்து 33 ஆயிரம் வோல்ட் மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்றைய தினம் கல்பெத்தாவே எனும் இடத்தில் நடைபெற்றது.

இந்த விபத்தில் மின்கம்பம் முறிந்து குறித்த பேருந்தின் மீது விழுந்த போதிலும் அதில் பயணித்த கடற்படை வீரர்கள் 18 பேரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து அரச சொத்துக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் குறித்த பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

## மேர்வினை புலனாய்வு பிரிவு விசாரிக்கும்?

(கொழும்பு)

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

களனி பிரதேசசபை உறுப்பினர் ஹசித மடவல கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அமைச்சரின் நாடாளுமன்ற இணைப்புச் செயலாளர் சிங்கப்பூர் சரத் உள்ளிட்ட ஐந்து பேர் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தம்மால் வழங்கப்பட்ட பதவிகள்ளை இரத்து செய்வதாக அமைச்சர் மேர்வின் சில்வா அறிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அரசியல் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் கம்பஹா மாவட்ட தேர்தல் தொகுதியின் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு விசேட பதவிகள் வழங்கியிருந்தேன்.

இதற்கான விசேட அடையாள அட்டைகளையும் விநியோகித்திருந்தேன். எனினும் இந்த அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி சிலர் எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்துகின்றனர்.

இணைப்புச் செயலாளர், இணைப்பாளர் மற்றும் ஆலோசகர் போன்ற பதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

கடந்த 9 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த சகல பதவிகளையும் இரத்துச் செய்ய தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

விநியோகம் செய்யப்பட்ட விசேட அடையாள அட்டைகளை பொதுமக்கள் தொடர்பு அமைச்சில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ-2)

## சட்டக்கல்லூரி விவகாரம்; விவாதம் நடத்த கோரிக்கை

### சம்மதம் தெரிவித்தார் நீதியமைச்சர்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டுக்கான சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் முழுநாள் விவாதமொன்றை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது ஒரு பாரிய பிரச்சினையாக நாட்டில் இன்று ஏற்பட்டுள்ளது. இதனால் குறித்த பிரச்சினை தொடர்பில் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சட்டக்கல்லூரி அதிகாரிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டால் புதிதாக பரீட்சை நடத்த தயார் என பரீட்சைகள் ஆணையாளர் இணங்கியுள்ளதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் விவாதம் நடத்துவதற்கு நீதி அமைச்சர் ஹக்கீமும் இணக்கம் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஐந்து ஆண்டுகளில் எட்டு ஊடகவியலாளர்கள் கொலை

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை காணாமல் போன ஒருவராகவே அரசாங்கம் கருதுகின்றது என ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் கெஹலிக ரம்புக்வெல தெரிவித்தார்.


2005 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் 8 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐ.தே.கட்சி எம்.பி. தலதா அத்துக்கோரள எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் வரை முறையாக ஒவ்வொரு ஆண்டிலும் 02,01,02,02,01 என மொத்தமாக 8 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (அ-2)

## நாடாளுமன்றம் பதுங்கு குழியானால் வீதிகளில் பதுங்குகுழி தோண்டப்படும்

### அரசுக்கு எதிராக போராடுவோம் என்கிறார் விக்கிரமபாகு



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தோள் மீதேறிக் கொண்டுள்ளவர்கள் நாடாளுமன்றத்தை ஒரு பதுங்கு குழியாக்கியுள்ளனர். இந்த அரசாங்கம் நாடாளுமன்றத்துக்குள் பதுங்கு குழிகளை அமைத்தால் நாம் வீதிகளில் பதுங்குகுழிகளை அமைத்து இந்த அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுவோம் என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்திய நாடாளுமன்ற தெரிவுக்குழு விடுத்த அறிக்கை முழுமையற்றது. அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை செல்லுபடியற்றது என நீதிமன்றமும் தீர்ப்பளித்துவிட்டது. இந்நிலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஏற்கமுடியாது என நாடாளுமன்றம் கூற முடியாது.

சட்டத்தை மாற்றுவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு. இருப்பினும் பிடிவாதத்துடன் செயற்பட முடியாது. இவ்வாறானதொரு நிலையில் இந்த விவகாரம் தொடர்பிலான சபாநாயகரின் கருத்து என்ன என்பதே எமது கேள்வியாகும்.

நாடாளுமன்றம் தனது பொறுப்பில் இருந்து மீறிச் செயற்படுகின்றது. ஜனாதிபதியின் தோள் மீது ஏறிக்கொண்டு நாடாளுமன்றத்தில் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர். அவர்கள் நாடாளுமன்றத்துக்குள் பதுங்கு குழிகளை அமைத்தால் நாம் வீதிகளில் பதுங்கு குழிகளை அமைக்க எமக்கும் நேரிடும்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் சர்வதேசத்தின் முன் பாசாங்கு காட்டி வரும் இந்த அரசாங்கம் உள்நாட்டுக்குள் சதி செய்கின்றது. இந்த சதிக்கு பிரதம நீதியரசரை பலிக்கடாவாக்குகின்றது.

நீதியரசர் விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் பலவந்தமானதொரு விவாதம் இடம்பெறுமாயின் நாம் இந்த அரசாங்கத்துக்கு எதிராகப் பாரிய போராட்டத்தை முன்னெடுப்போம்.

நீதிமன்றத்தில் தோல்வியுற்றவர்கள் அரச வீட்டின் அனுமதியுடன் நாடகம் போட்டு வருகிறார்கள். இதனால், பிரதம நீதியரசரின் வீட்டுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு நாடகம் போடுகிறார்கள் என்றார். (அ-2)

## மாணவர்கள் தங்கியிருந்து கற்பதற்கு விடுதி வசதி

யாழ். அரியாலை கனரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆண், பெண் இருபாலாருக்குமுரிய மாணவர் விடுதிகள் கடந்த வருடம் முதல் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுமாணவர்களுக்கானசேவையினை வழங்கி வருகின்றது.

விடுதியில் தங்கி கல்வி கற்க விரும்பும் புதிய மாணவர்களிற்கு (ஆண்/பெண் இருபாலாருக்கும்) அனுமதி வழங்கப்படுகிறது. விரும்புகின்ற மாணவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அனுமதிக்கான விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியும் என அதிபர் அறிவித்துள்ளார்.

இச்சேவை சிறப்பாக இயங்குவதற்கு அரியாலையைச் சேர்ந்த லண்டன் வாழ் மாணவர்கள் உதவி புரிந்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மழை கொட்டியது; பல குடும்பங்கள் பாதிப்பு

## நெல் வயல்களும் அழிவு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கடந்த சில நாட்களாக பெய்துவந்த தொடர் மழையால் மீண்டும் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு நெல்வயல்களும் அழிவடைந்துள்ளன.

ஏற்கனவே வீடுகளுக்குள் மழைநீர் புகுந்ததன் காரணமாக நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த பலநூற்றுக் கணக்கான குடும்பங்கள் வெள்ளநீர் வடியத் தொடங்கியதை அடுத்து மீண்டும் தமது வீடுகளுக்குள் திரும்பியிருந்தனர்.

மாங்குளம் கிராமத்தில் 163 குடும்பங்களைச் சேர்ந்த 553 பேர் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் தங்க[illegible]க்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் வீடுகளுக்கு திரும்பியிருந்த நிலையிலேயே மீண்டும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே எவ்வித உதவிகளும் கிடைக்காத இம் மக்களுக்கு இம்முறையும் எவரும் எவ்வித உதவிகளும் வழங்கவில்லை.

மாங்குளம் பிரதேச பங்குத் தந்தையின் ஏற்பாட்டில் குறித்த தொகை குடும்பங்களுக்கு மட்டும் சில அத்தியாவசிய பொருட்கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இம்முறை பெய்த தொடர் மழை காரணமாக எஸ்.ஆர்.க்டைச் சந்தியில் இருந்து செல்வபுரம் வரையான வீதிக்கு அருகில் வீட்டுத் திட்டங்கள் இல்லாத குடிசை வீடுகளில் வாழ்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களை சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 400 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் நண்பர்கள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை. அத்தோடு வங்கிகளில் வட்டிக்கு பணம் எடுத்து நெல்விதைத்த விவசாயிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனிக்குள நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் ஆயிரக்கணக்கான ஏக்கர்களும் சிறுகுளங்களான புத்துவெட்டுவான், மருதங்குளம், ஐயங்கன்குளம் உட்பட பலசிறு குளங்களின் கீழ் விவசாயம் செய்த பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் அழிவடைந்துள்ளன.

இங்கு பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களுக்கு உதவிகளை வழங்கவேண்டுமென கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (அ-3-15)

# செஞ்சோலை சிறுவர் இல்லம் சொந்த இடத்தில் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

போர் காரணமாக வவுனியாவில் இயங்கி வந்த செஞ்சோலை சிறுவர் இல்லம் எதிர் வரும் 20 ஆம் திகதி முதல் சொந்த இடமான கிளிநொச்சி திருவையாறில் தனது நடவடிக்கையை மீள ஆரம்பிக்கவுள்ளது.

கிளிநொச்சியில் இயங்கவுள்ள மேற்படி சிறுவர் இல்லத்தை வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் த.செ.பத்மநாதன் திறந்து வைக்கவுள்ளார். (அ-3-267)

# சிறைச்சாலையில் இருந்து 10 கைதிகள் தப்பியோட்டம்

அவிசாவளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 சிறைக்கைதிகள் நேற்று அதிகாலை 5 மணியளவில் தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச் சென்றுள்ள சிறைக் கைதிகள் இது வரையிலும் கைது செய்யப்படவில்லை என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தப்பிச் சென்ற இவர்கள் சிறைச்சாலை பாதுகாப்பிற்காக அங்கு நின்று கொண்டிருந்த இரண்டு சிறைச்சாலை அதிகாரிகளை கட்டிவைத்த பின்னரே தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவிசாவளை சிறைச்சாலையில் மொத்தமாக 13 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# தமிழ் பிரதேச பெயர்ப்பலகைகளில் சிங்களமொழிக்கு முன்னுரிமை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சில முக்கியமான செயலகங்களின் பெயர்ப்பலகைகளில் சிங்கள மொழியை முதன்மைப் படுத்தியுள்ளதாக அங்குள்ள புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், வெலிஓயா பிரதேச செயலகம், துணுக்காய் பிரதேச செயலகம், மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் ஆகியவற்றில் உள்ள பெயர்ப்பலகைகளிலேயே சிங்கள மொழியை முதன்மைப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பிரதேசங்களில் தமிழ் மொழியையே முதன்மைப்படுத்த வேண்டுமென அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளது.

எனவே, உரியதரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென புத்திஜீவிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ-3-267)



நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாகவுள்ள நினைவாலயத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சி.வி.கே.சிவஞானம் மலர்தூவி அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம். (படம்:-எஸ்.ஆர்.கரன்)

# வடக்கின் காணி பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது

## முன்னாள் சட்டமா அதிபர் மொஹான்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளில் வடக்கின் காணி பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பாக காணி உரிமையாளர்களிடம் காணியை வழங்கும் வேலை தொடங்கிவிட்டது. காணிப் பிரச்சினைகளில் அநேகமானவை இந்த வருடத்திற்குள் தீர்ந்துவிடும் என நம்புகின்றேன்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கு அமைய வடமாகாணத்தில் புனர்வாழ்வு, மீள்கட்டுமானம், நல்லிணக்கம் ஆகியன சமூகமாக நடைபெறுகின்றன.

இதற்காக சுமார் 100 மில்லியன் ரூபா வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதனை துரிதப்படுத்துவதற்காக இதுவரை 10 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முக்கியத்துவப்படுத்தி நாட்டிலுள்ள காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கென பிரச்சினைக்குரிய காணிகள் பற்றிய ஜனாதிபதியின் விசேட செயலணி நான்காவது காணி ஆணைக்குழு அமைக்கவுள்ளது என்றார். (அ-2)

# பெரியகடை மரக்கறிச் சந்தை ஒரு மாதத்திற்கு மாநகரசபையிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட யாழ்ப்பாணம் பெரியகடை மரக்கறிச்சந்தை ஒரு மாத காலத்திற்கு மாநகர சபையினால் நடத்தப்படுமெனவும் மீண்டும் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ். மாநகர ஆணையாளர் செ. பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரியகடை மரக்கறிச்சந்தையை வழமை போல் இவ்வாண்டுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கடந்த ள2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அனைத்து உள்ளூர் பத்திரிகைக ளிலும் பிரசுரமாகக்கூடிய வகையில் ஆரம்ப கேள்வித்தொகையாக 15 இலட்சத்து 73 ஆயிரத்து 886 ரூபாவென தீர்மானிக்கப் பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது.

இதற்கு எவரும் விண்ணப்பிக்காமையினால் மீள் கேள்வி கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அனைத்து உள்ளூர் பத்திரிகைகளிலும் பிரசுரமாகக்கூடிய வகையில் தீர்மானிக்கப்பட்ட கேள்வித் தொகையின் 10 வீதம் குறைப்புடன் விளம்பரப்படுத்தப்பட்டது.

அதன்போதும் இக் குத்தகைக்கு எவரும் விண்ணப்பிக்காமையால் ஏலத்தின் மூலம் குத்தகையினை வழங்கலாம் என முடிபு செய்யப்பட்டு சந்தையிலுள்ள நிரந்த வாடகைதாரர் தவிர்ந்த வியாபாரத்தில் ஈடுபடும் அனைத்து வியாபாரிகளின் கட்டண அறவீட்டினை குத்தகைதாரரே மேற்கொள்ளக் கூடிய வகையில் வருமானப் பரிசோதகர்களால் மதிப்பீடு செய்யப்பட்ட 29 இலட்சம் ரூபா ஆரம்ப ஏலத்தொகையாக தீர்மானித்து ஏலமிடப்பட்டது.

ஏலத்தில் ஏலத்தொகையிலும் குறைவாக பெறுநரால் முன்வைக்கப்பட்ட கேள்விக்கான 21 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிராகரிக்கப்பட்டு சந்தையினை ஒரு மாதத்திற்கு மாநகர சபை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டு மாநகரசபை செயற்பட்டு வருகின்றது. பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கேள்வி முறைமை ஊடாக மீண்டும் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (அ-5)

# நாட்டில் நாள்தோறும் ஐந்து சிறுவர்கள் துஷ்பிரயோகம்

## சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் நாள்தோறும் 5 சிறுவர்கள் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சிறுவர் மற்றும் பெண்களை பாதுகாக்க நியமிக்கப்பட்ட அதிகாரிகளே குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் தலைவி திமுது ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாடுமுழுவதிலும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. பிரதான இரையாக பெண்களும் சிறுவர்களும் குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினை எழுந்துள்ளது. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம்செலுத்துவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் பிடியில் உள்ள இந்திய மீனவர்களுக்கு சித்திரவதை

## காப்பாற்ற கோருகிறார் கருணாநிதி

ஈரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிரதமருக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார்.

கருணாநிதி எழுதியுள்ள கடிதத்தில் தமிழக மற்றும் கேரள மீனவர்கள் 20 பேர் எல்லைத் தாண்டி மீன்பிடித்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு கடந்த 50 நாட்களாக ஈரானில் ஈகிள்ஸ் தீவில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.


அங்கு அவர்கள் துயரத்தில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் உணவு உண்ணாமல் தண்ணீர் கூட குடிக்காமல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் ஈரானில் உள்ள சிறைத்துறை அதிகாரிகள் அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது.

மீனவர்கள் இவ்வாறு அந்நிய நாட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் இங்குள்ள அவர்களது குடும்பத்தார் கண்ணீருடன் வாழ்வதோடு குடும்பக் கஷ்டத்துடன் வாழ்கின்னறனர்.

இந்த விடயத்தில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# நிலவில் மோதியது கற்கள்; 3 பள்ளங்கள் கண்டுபிடிப்பு!




பூமியின் துணைக்கிரகமான நிலவில் 3 பெரிய பள்ளங்கள் இருப்பது தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி மையமான நாசா தனது விண்கலத்தின் உதவியுடன் எடுத்துள்ள புகைப்படத்தில் நிலவிய 3 பெரிய பள்ளங்கள் இருப்பதை கண்டுபிடித்துள்ளது.

இது குறித்து நாசா விஞ்ஞானிகள் கூறுகையில், இந்த பள்ளங்கள் எரிகல் மற்றும் வால் நட்சத்திரம் ஆகியவற்றால் ஏற்பட்டிருக்கலாம்.

இந்த பள்ளங்களில் தென்மேற்கில் அமைந்த பள்ளம் மிகவும் பெரியதாக உள்ளது . இதன் விட்டம் 180 மீற்றர் அளவில் உள்ளது.


இதற்கடுத்து மத்தியில் அமைந்த பள்ளம் 150 மீற்றரும் வடகிழக்கு பகுதியில் அமைந்த பள்ளம் 125 மீற்றரும் என்ற அளவில் உள்ளது.

இந்த பள்ளங்கள் அடுத்தடுத்த சில நிமிடங்களில் ஏற்பட்டிருக்கக் கூடும் எனவும் தெரிவித்துள்ளனர். (அ-5)

# தாக்குதலின் எதிரொலியால் இந்திய-பாக். உறவில் விரிசல்

## குற்றச்சாட்டை மறுக்கிறது பாகிஸ்தான்

**பாகிஸ்தான் நடத்திய துப்பாக்கிச்சூட்டிற்கு இந்திய வீரர்கள் பலியானதையடுத்து இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.**



காஷ்மீரில் எல்லைக் கோட்டுப் பகுதிக்கு அருகே கடந்த செவ்வாய்க்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவத்தினர் மீது பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியதில் ஹேமராஜ் மற்றும் சுதாகர் சிங் என்னும் இரு வீரர்கள் உயிரிழந்தனர்.

அவர்களின் தலையை பாகிஸ்தான் படையினர் கொடூரமாக துண்டித்ததாகவும் தகவல் வெளியானது.

இந்நிலையில் பாகிஸ்தான் தூதர் சல்மான் பசீரை நேரில் வரவழைத்த வெளியுறவு அமைச்சகம் அவரிடம் இந்தியாவின் கடும் கண்டனத்தை தெரிவித்தது.

இந்திய வீரர்களின் உடல்கள் நடத்தப்பட்ட விதம் மிகவும் கவலையளிக்கிறது. இது மிகவும் வேதனையளிக்கிறது. இதுபோன்ற செயல்களை ஏற்றுக் கொள்ள முடியாது என பாகிஸ்தானிடம் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது என வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தியாவின் குற்றச்சாட்டை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹீனா ரப்பானி மறுத்துள்ளதுடன் இது தொடர்பாக ஐ.நா கண்காணிப்பாளர்கள் விசாரணை மேற்கொண்டால் அதற்கு ஒத்துழைக்கத் தயார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை சமீபத்தில் நல்லெண்ண நடவடிக்கையாக பாகிஸ்தானியர்களுக்கு விசா நடைமுறைகளை இந்தியா எளிதாக்கியிருந்தது. தற்போது இரண்டு இராணுவ வீரர்களுக்கு நேர்ந்த கொடூரத்தால் அந்த முடிவு மறுபரிசீலனை செய்யப்படலாம் என கூறியிருக்கிறது.



இதேவேளை இந்திய இராணுவ வீரர்களைக் கொன்றதில் பாகிஸ்தான் இராணுவத்துக்கு தொடர்பில்லை என்று அந்நாட்டு வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹீனா ரப்பானி தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவ வீரர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் மிகக் கொடூரமாகக் கொலை செய்தது குறித்து பாகிஸ்தான் தரப்பில் விசாரணை நடத்தப்பட்டது. அதில் தங்கள் நாட்டு இராணுவத்துக்கும் தொடர்பில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் மூன்றாம் தரப்பு விசாரணைக்கு பாகிஸ்தான் தயார் என்றும் ஹீனா தெரிவித்துள்ளார். (அ-5)

## விளம்பரத்தில் லெனினின் கார்ட்டூன்; போலந்தில் கடும் எதிர்ப்பு




போலந்தில் நிறுவனமொன்று விளம்பரத்திற்காக ரஷ்ய கம்யூனிஸ்ட் தலைவர் லெனினின் கார்ட்டூன் படத்தை பயன்படுத்தியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

போலந்தில் உள்ள போல்ஸ்கா பெலிபோனியா சைப்ரோவா என்ற கைப்பேசி நிறுவனம் தன் வாடிக்கையாளர்களை கவரும் வகையில் புதிய விளம்பரத்தை தயாரித்தது.

இதில் ரஷ்ய கம்யூனிஸ்ட் தலைவர் லெனினின் கார்ட்டூனை பயன்படுத்தி தொலைக்காட்சியிலும் போஸ்டர் மூலமும் விளம்பரப் படுத்தியுள்ளது.

இதற்கு போலந்தில் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளதுடன் லுகாஸ் காமின்ஸ்கி என்பவர் குறித்த நிறுவனத்திற்கு வெளிப்படையாக எழுதியுள்ள கடிதத்தில் இந்த 20ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய குற்றவாளிகளில் லெனினும் ஒருவர் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை லெனின் கார்ட்டுனுக்கு எதிராக கைபேசி நிறுவனத்திற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டு உள்ளன. இதையடுத்து லெனினின் கார்ட்டூனை நீக்க சம்பந்தப்பட்ட கைபேசி நிறுவனம் முடிவு செய்துள்ளது. (அ-5)

## அசாமில் குண்டுவெடிப்பு; மூன்று சிறுவர்கள் பலி

அசாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டுவெடிப்பில் மூன்று சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அசாம் தலைநகர் கௌஹாத்தியிலிருந்து 500கி.மீ தொலைவிலுள்ள திக்போய் நகரில் கார்ஜன் பாடசாலையில் இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இக்குண்டு வெடித்ததில் அந்த தொடக்க பாடசாலையில் பயிலும் மூன்று மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். மற்றும் இரு மாணவர்கள் படுகாயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அசாம் விடுதலை முன்னணி அமைப்பைசார்ந்தவர்கள் இக்குண்டு வெடிப்பினை நிகழ்த்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# இந்திய மாணவன் பிரிட்டனில் மாயம்

இந்தியாவைச் சேர்ந்த சவுஷிக் பால் (வயது 19) என்ற மாணவன் பிரித்தானியாவின் மான்செஸ்டர் நகரில் உள்ள மெட்ரோ பாலிட்டன் பல்கலைக்கழகத்தில் படித்து வந்தார்.

இவர் கடந்த டிசம்பர் 31ஆம் திகதி நள்ளிரவு நடந்த புத்தாண்டு கொண்டாட்டத்தில் நண்பர்களுடன் கலந்து கொண்ட பின் இரவு ஒரு விடுதிக்கு சென்ற அவரைக் காணவில்லை என கூறப்படுகின்றது.

இது பற்றிய தகவலை அறிந்ததும் அவரது தந்தை சாந்தனு பால் மான்செஸ்டர் வந்தார். அங்கு தனது மகனை காணவில்லை என பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார்.

பின் நிருபர்களிடம் பேட்டியளித்த அவர், எனது மகன் பிரித்தானியாவில் உள்ள பல இடங்களுக்கு சுற்றுப் பயணம் செய்ய விரும்பினான். தற்போது எங்கு இருக்கிறான் என தெரியவில்லை. எனவே அவனைப் பற்றி தெரிந்தால் தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (அ-5)

# மாலியின் பாதுகாப்பிற்கு தனியாக உதவ முடியாது

## கனடா தீர்க்கம்

மாலியில் அல்கொய்தாவின் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதால் கனடா தனது இராணுவ உதவியை தனிப்பட்ட முறையில் செய்ய முடியாது எனவும் தனது மேலைநாட்டுக் கூட்டாளிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்பதோடு ஆபிரிக்க நண்பர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தெரிவித்தார்.

இருப்பினும் மாலிக்கான மனித நேய உதவிகள் தொடரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவரும் பெனின் குடியரசின் ஜனாதிபதியுமான தோமஸ் போனி யாயியைச் சந்தித்த ஹார்ப்பர் நேட்டோ படைகளுடன் இணைந்து மாலிக்கு உதவ முடியுமே தவிர தான் தனியாக இராணுவ உதவி அளிக்க இயலாது எனக் கூறியுள்ளார்.

மேலும் இரு ஜனாதிபதிகளும் அந்நிய முதலீடு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன் மூலம் 2013 முதல் 2021இற்குள் 18 மில்லியன் டொலர் மாலிக்கு வழங்கப்படும் என்று ஹார்ப்பர் தெரிவித்தார். (அ-5)

# நியூயோர்க்கில் கப்பல் விபத்து; 50 பேர் வரை படுகாயம்



அமெரிக்காவின் நியூயோர்க் நகர துறைமுகத்தில் கப்பல் மோதியதில் 50 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் மன்ஹாட்டன் துறைமுகத்தில் தளத்தை இடித்தபடி சீ ஸ்ட்ரீக் வால் ஸ்ட்ரீட் என்ற கப்பல் வேகமாக மோதியது.

இதனால் வெடிகுண்டு வெடித்தது போன்ற பயங்கர சத்தம் கேட்டதுடன் மோதிய வேகத்தில் பலர் தூக்கி வீசப்பட்டுள்ளனர். இதில் 50 பேர் படுகாயமடைந்தனர்.

இதனை தொடர்ந்து பொலிஸாரும் தீயணைப்பு படையினரும் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். (அ-5)

# நித்தியானந்தாவே திரும்பிபோ; கன்னட அமைப்பு போர்க்கொடி!

பெங்களூர் அருகே உள்ள பிடதியில் நித்தியானந்தா சுவாமிக்கு ஆசிரமம் உள்ளது. மதுரை மடாதிபதியின் இளைய ஆதீனமாக நித்தியானந்தா நியமிக்கப்பட்டதால் அவர் மதுரைக்கு வந்து பதவியேற்றார்.

ஆனால் அவரது நியமனத்துக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியதால் இளைய ஆதீன பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார்.

நீண்ட நாட்களுக்கு பின் நித்தியானந்தா பெங்களூர் அருகே உள்ள பிடதி ஆசிரமத்துக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சென்றுள்ளார்.

அவருடன் 30 சீடர்கள் சென்றனர். அங்குள்ள தியான பீடத்தில் பக்தர்களுக்கு அருளுரை வழங்கினார்.

நித்தியானந்தா ஆசிரமத்துக்கு வந்திருக்கும் தகவல் கிடைத்ததும் கர்நாடக நவ நிர்மாண சேவா என்ற கண்டன அமைப்பினர் சுமார் 200 பேர் ஆசிரமத்துக்கு முன் திரண்டனர்.

ஆசிரமத்திலிருந்து நித்தியானந்தா உடனடியாக வெளியேற வேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டம் நடந்தது. நித்தியானந்தாவே திரும்பிப் போ என கோஷம் எழுப்பினர். மேலும் ஆசிரமத்துக்கு வெளியே வைத்திருந்த நித்தியானந்தா உருவப்படம் மீது கரி பூசியுள்ளனர்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டதும் பொலிஸார் விரைந்து வந்து ஆர்ப்பாட்டக்காரர்களை அப்புறப்படுத்தினார்கள். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடைய மனம் ஏழைகளுக்காக இரக்கம் கொள் கிறதோ அவனையே மகாத்மா என்பேன்.
-சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இங்கோ தலைவர்கள் மார்தட்டுகிறார்கள் அங்கோ உனக்கு தலை வெட்டு

சவுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சகோதரி ரிசானாவுக்கு முதலில் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கையிலிருந்து பணிப்பெண்ணாகச் சென்ற ஒரு ஏழைப் பெண்பிள்ளைக்கு மரண தண்டனை விதித்து அதனை நிறைவேற்றிய கொடுஞ்செயல் கேட்டு உலகம் முழுவதும் நெக் குருகிப் போயுள்ளது.

ரிசானாவின் மரணதண்டனையை நிறை வேற்ற வேண்டாம் என சவூதி அரசிடம் பலரும் கருணை மனுக்களை அனுப்பியிருந்த நேரத் தில்,

ரிசானா மூதூரில் உள்ள தனது வீட்டுக்கு விரை வில் திரும்புவார் என்று நம்பியிருந்த வேளை யில், கழுத்துவெட்டி அவருக்கான மரண தண் டனை நிறைவேற்றப்பட்ட செய்தி கேட்டு கண் ணீர் வடிக்காத உள்ளங்கள் இருக்க முடியாது.

என்ன செய்வது! ரிசானா ஒரு ஏழை பிள்ளை. தன் வறுமையை போக்குவதற்காக தன் குறைந்த வயதிலும் வீட்டுப் பணிப்பெண்ணாக சவூதிக்குச் சென்றார்.

துரதிர்ஷ்டவசமாக அவர் பராமரித்த குழந்தை புட்டிப்பால் புரக்கேறி இறந்துபோக, கொலைக் குற்றத்திற்கு ரிசானா ஆளாக வேண்டிய பரி தாபம். இவ்வாறு ரிசானாவின் வரலாற்றை எழுதி முடித்துவிடலாம். ஆனால் மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களை அனுப்புகின்ற இலங்கையின் பரிதாப நிலையை சிந்திக்க முடி யாத சிங்களப் பேரினவாதம், எங்களை எதுவும் செய்துவிடமுடியாதென அடிக்கடி மார்தட்டு கிறது.

போதாக்குறைக்கு இங்குள்ள முஸ்லிம் அரசி யல் தலைமைகள், ரிசானா போன்ற ஏழைப் பிள்ளைகள்; மத்திய கிழக்கு நாடுகளில் பணிப் பெண்களாக சென்று படாப்பாடுபடும் நிலைமையை அறியாது, தங்களின் சுகபோக வாழ்விற்காக தகிட தத்தோம் போடுகிறார்கள்.

இது எங்கள் நாடு, எங்கள் இனம், எங்கள் மதம், எங்கள் ஆட்சி என்று மார்தட்டுகிறவர் கள் முதலில் இங்கிருந்து மத்தியகிழக்கு நாடு களுக்குப் பணிப் பெண்களை அனுப்புகின்ற கேவலத்தை நிறுத்த வேண்டும். அப்போது தான் மார்தட்டுவதில் ஏதோ ஒரு அர்த்தம் தெரியும்.

ரிசானா என்ற அந்த சிறுபிள்ளையைக் காப் பாற்ற முடியாது போன எங்கள் நாடு, இனிமே லாவது யுத்தத்திற்கும் ஆயுதங்களுக்குமாக பணத்தை கொட்டிக் பாழாக்காமல், ரிசானா போன்ற ஏழைப்பிள்ளைகளுக்கு இங்கொரு வேலை கிடைக்க வழிசெய்ய வேண்டும்.

அன்புச் சகோதரி ரிசானா! உன் விடுதலைக் காக இவ்விடத்தில் எழுதிய நினைவோடு ஆரும் அற்ற அநாதையாய் கறுப்புத்துணியைத் தவிர வேறு எந்த துணையுமின்றி கூரிய வாளால் உன்தலை வெட்டுண்ட செய்திகேட்ட சோகத்தோடு,

ஓ! இலங்கைத்திருநாட்டின் தலைவர்களே! புத்திஜீவிகளே! பணிப்பெண் என்ற உங்கள் உயர்ந்த ஏற்றுமதிக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

இனவாதம் களைந்து நாட்டை வளமாக்குங் கள். அப்போது நாம் எல்லோரும் சேர்ந்து மார் தட்டுவோம். எங்களை எவரும் எதுவும் செய்ய முடியாதென்று.

# ரிசானாவின் மரணம் மிகத் துயரமானது!

## ஆனந்தசங்கரி அறிக்கை



ரிசானாவின் மரணம் இந்த நாட் டின் மிகத்துயரமான நாளாகும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தெரி வித்தார். இது தொடர்பாக அவர் வெளி யிட்ட அறிக்கை.

சவுதி அரேபியாவில் ரிசானாவுக்கு எதிர்பாராத விதமாக மரணதண்டனை நிறைவேற்றியதை அறிந்ததும் பேரதிர்ச்சியடைந்தேன். எமக்குத் தெரியாமல் எத்தனையோ ரிசானாக் களின் குடும்பங்கள் ஒட்டு மொத்தமாக வறுமையில் வாடுகின்றன என்பதையே இந்த மிகுத் துயரமான சம்பவம் எடுத் துக்காட்டுகின்றது.

மக்கள் பிச்சை எடுக்கும் நிலையில் உள்ளனர். அரசு தினமும் கோடிக்கணக் கில் வீண்விரயம் செய்கின்றது. கேளிக் கையிலே பெரும் தொகைப்பணம் வீண்விரயமாகின்றது. கிளிநொச்சி யிலும் சரி நாட்டின் வேறு எங்கேயாயி னும் சரி அதிநவீனவிளையாட்டு அரங்கு களை யார் கேட்டார்கள்? லட்சக்கணக் கான பணம் செலவு செய்து அமைச்சர் கள் வந்தால் தான் அவ்வாறான விளை யாட்டு அரங்குகளை திறப்புவிழா செய்ய வேண்டும் என்ற நிலையே இன்றுள்ளது.

1972ம் ஆண்டு வறிய மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலவசமாகவும் மிகக் குறைந்த விலையிலும் கூப்பன் மூல மாக பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக வழங்கப்பட்டன.

அரசு அந்த முறையை உடன் அறி முகப்படுத்த வேண்டும். மக்களின் சாபத் துக்கு ஆளாகாமல் மக்களின் பசியையும் வறுமையை போக்குவதே இந்த அரசின் முதல் பணியாக இருக்கவேண்டும்.

இன்னுமொரு ரிசானா உருவாக நாம் இடமளிக்க கூடாது. நம்நாடு ஜன நாயக சோஷலிச நாடு என்று பெயரள வில் சொல்லக்கூடாது. அதை அரசை செயலிலும் காட்ட வேண்டும்.

இந்தச் சிறுமி ரிசானாவின் தியாகம் எமக்கு ஒருபாடமாக அமையட்டும். இவ் வாறன சிறுவர்கள் வெளிநாடுகளுக்கோ வெளியிடங்களுக்கோ வேலை தேடிச் சென்றுதான் தங்கள் குடும்பங்களை காப்பாற்ற வேண்டும் என்ற நிலை மாறட்டும்.

அரசியல் தலைமைகள் ஒருகணம் சிந்திக்கட்டும் இந்த ரிசானாவை இழந்து தவிக்கும் அந்த ஏழைப்பெற்றோருக் கும், உற்றார் உறவினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தி யடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

## இரண்டாம் மொழிக்கல்வி மாணவர்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது மொழிக்கல்விக்கான கல்லூரி மாணவர்கள் வடமாகாண ஆளுநர் சந்திப்பு இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10மணிக்கு கோப் பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கல ந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் இவ் ஆண்டிற்கான இரண்டாவது மொழிக்கற்கைநெறி எனும் விடயம் ஆராயப்படவுள்ளதாக வும் நோக்கமும் இலக்கும் பற்றிய கருத்துரைகளை முன்னாள் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பணிப்பா ளர் திருமதி லிலானி அமரசிங்க வழ ங்கவுள்ளார்.ண

இதேவேளை இச்சந்திப்பு நிகழ்வு பழைய பூங்கா வீதியில் அமைந்து ள்ள ஆளுநர் காரியாலயத்தில் நடை பெற இருப்பதாக முன்னர் அறிவிக் கப்பட்டபோதும் சீரற்ற காலநிலை கார ணமாக மேற்குறித்தவாறு தேசிய கல்வி யியற் கல்லூரியில் இடம்பெறவுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## நான்கு மாவட்டங்களுக்கு அனர்த்த அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

நிலவும் சீரற்ற காலநிலையால் நான்கு மாவட்டங்களில் உள்ள சில பிரதேச ங்களுக்கு 24 மணிநேர அனர்த்த அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, மாத்தளை, கண்டி, பதுளை ஆகிய நான்கு மாவட்டங்களில் சில பகுதிகளுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் வலப் பனை, கொத்மலை மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர் பகுதிகளுக்கும் கண்டியில் மெதும்பர, பாதஹேவா கெட்ட கங்கவடகொறள ஆகிய பகுதிகளுக் கும் 24 மணிநேர அனர்த்த எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளையில் மஹியங்கனை பிர தேச செயலாளர் பிரிவு தவிர்ந்த ஏனைய அனைத்து செயலகப் பிரிவுகளுக்கும் 24 மணிநேர அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தளையில் இரத்தோட்டை, உக்கு வெல, மாத்தளை ஆகிய பிரதேச செய லாளர் பிரிவுகளுக்கு 24 மணிநேர அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது. (அ-2)

## வெள்ளி நற்சிந்தனை

106

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

மனிதன் தன்னுடைய குறையை மற்றவரிடம் கூறுவதற்குத் தயங்கும் இயல்புடையவன். ஆனால் ஒரு சிலர் இதற்கு மாறான இயல்பு கொண்டவ ராயுள்ளனர். மணிவாசகர் தன் குறை யைத்தான் உணர்ந்தபோது பிறரறிய அதைப்பாடலிலேயும் பதிவு செய்து வைத்துள்ளனர். அவர் பாடிய நீத்தல் விண்ணப்பப்பாடல்கள் இன்றும் இத ற்கு ஒரு சான்றாக நின்று நிலவுகின் றன. அவர் பாடிய அப்பாடல்களை இன்று படிக்கும்போது மனதில் உள்ள மாசு எமக்குத் தெளிவாகப் புலப்படு கிறது.

உலக வாழ்க்கையில் நாம் கொள் ளும் பொய்மையான கோலத்தை ஒரு முறை நினைத்துப் பார்க்கும் மனப் பக்குவத்தை மணிவாசகருடைய பாடல் தருகிறது. இறைவனால் வலிய வந்து ஆட்கொள்ளப்பட்ட பெரிய பேற்றினைப் பெற்றவர் மணிவாசகர். அவர் மனம் பக்குவப்பட்டது இறைவழிபாட்டின் மூலமே யாகும். எனினும் தன் மனம் பக்குவப் படுமுன்னர் இருந்த நிலையை அவர் நினைத்துப்பார்க்கிறார். அதை இறை வனிடம் ஒரு விண்ணப்பமாக்கி வேண்டு தல் செய்கிறார். தன் குறையைத் தானே எடுத்துக்கூறும் மணிவாசகர் எமக்கெ ல்லாம் நல்லதொரு வழிகாட்டியாவார்.

உள்ளத்தால் பொய்யனான தன்னை யும் ஒருபொருளை மதித்து ஆட்கொண்ட இறைவனுடைய அருட்கொடையை வி தந்து பாடலிலே பாராட்டுகிறார். பொய்யவனேனை பொருளென ஆண்டு ஒன்று பொத்திக்கொண்ட மெய்ய வனே! என அவர் இறைவனை விளி ப்பது அவர் மனச்சீர்மையை நன்கு உணர்த்துகிறது. ஆனால் ஆட்கொண்ட இறையருள் தொடரவேண்டும் என விரும்புகிறார். தன்குறையைப் பிறர் அறியாவண்ணம் மறைத்து ஆட்கொண்ட இறையருள் மணிவாசகருக்கு இன் னொரு நிகழ்வை நினைவிற் கொணர் கிறது. பாற்கடலிலே தோன்றிய ஆல கால விசத்தைத் தேவர்களைக் காப்ப தற்காக எடுத்துண்ட இறைவன் கொடை மனம் மனிதன் நன்கு உணர வேண் டியதொன்றாகும். தன்னுடைய கறு த்த கண்டத்தை அதற்குச் சான்றாகக் காட்டி நிற்கும் திருத்தோற்றம் மணி வாசகருடைய மனத்தை நெகிழ வைக் கிறது. தன்னைப் பற்றியே நினைந்து வாழும் உலக மக்களுக்கு இத்திருத் தோற்றம் தரும் உயிர்களைப் பேணும் உயர்ந்த உள்ளம் காட்டும் வாழ்வி யலை மணிவாசகர் எடுத்துரைக்கி றார். கோலம் பற்றிய எண்ணம் வந்த தும் உத்தரகோச மங்கையிலே கண்ட செய்யமேனி அவர் கண்முன்னே தோன் றுகிறது. செய்யவனே சிவனே என அவர் அழைக்கும் குரல் பாடலில் செறி ந்து எம் செவிகளையும் துளைத்து நிற் கிறது. எமது துன்பத்தையெல்லாம் துடைத் தெறியும் பேராற்றல் கொண்ட சிவனையே எல்லோரும் வழிபட வேண்டும் என்ற உறுதியைப் பாடலிலே மணிவாசகர் கூறியுள்ளமை துலக்கமாகவுள்ளது. சமண, பௌத்த மதப்பிரசாரம் நடை பெறும் காலத்தில் சைவத்தைப் பேண மணிவாசகர் பாடல்களைப் பாட வேண் டிய தேவையும் இருந்ததை இன்று நாம் உணரவைக்கின்றது. வினைதீர்க்க வல்ல வன் சிவனே என்பதை மணிவாசகர் தன் வாழ்வியலனுபவத்தோடு பொருத் திப்பார்க்கும் பக்குவம் எம்மையும் சிந் திக்கவைக்கிறது. பாடலை ஆழமாகப் படிக்கவேண்டும் எனத் தூண்டுகிறது.

பொய்ய வனேனைப் பொருளென
ஆண்டொன்று பொத்திக் கொண்ட
மெய்யவனே விட்டிடுதி கண்டாய்
விடமுண் மிடற்று மையவனே மன்
னும் உத்தர கோசமங் கைக்கரசே
செய்யவனே சிவனே சிறி
யேன் பவந் தீர்ப்பவனே

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்கிலாந்துக்கு யுவராஜ் அச்சுறுத்தலாக இருப்பார்?

**- கெவின் பீட்டர்சன்**

இங்கிலாந்து அணிக்கு யுவராஜ் சிங் மிகவும் அச்சுறுத்தலாக இருப்பார். அவரது சமீபத்திய நிலை சிறப்பாக உள்ளது என்று இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் கெவின் பீட்டர்சன் கூறியுள்ளார். இங்கிலாந்து அணி இந்தியாவுடன் ஒரு நாள் போட்டிகளில் ஆடவுள்ளது. இன்று முதல் போட்டி நடைபெறுகிறது. இந்த நிலையில், இங்கிலாந்து அணியின் வாய்ப்புகள் குறித்தும், இந்திய வீரர்கள் குறித்தும் கெவின் பீட்டர்சன் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்தியாவின் உலகக் கோப்பை நாயகன் யுவராஜ் சிங் அபாயகரமான துடுப்பாட்ட வீரர் மட்டுமல்லாமல் நல்ல பந்து வீச்சாளரும் கூட. இங்கிலாந்து அணிக்கு அவர் அச்சுறுத்தலாக இருப்பார். எந்த நேரத்திலும் ஆட்டத்தைத் தன் பக்கம் திருப்பி விடும் அபாயகரமானவர் அவர். அவரை சீக்கிரம் வெளியேற்றினால்தான் இங்கிலாந்துக்கு நல்லது. அதற்கு முயல வேண்டும் என்றார் பீட்டர்சன். சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான ருவென்ரி 20 போட்டிகளில் 6 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார் யுவராஜ். அதேபோல பாகிஸ்தானுக்கு எதிரான டுவென்ரி 20 தொடரிலும் 82 ஓட்டங்கள் எடுத்திருந்தார் யுவராஜ் சிங்.



## இந்தியாவில் கிரிக்கெட் வீரர்களுக்கு பஞ்சமில்லை

**-சரத் பவார்**

இந்தியாவில் கிரிக்கெட் வீரர்களுக்கு பஞ்சமில்லை என ஐசிசி மற்றும் பிசிசிஐயின் முன்னாள் தலைவரான சரத் பவார் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி தொடர்ச்சியாக தோல்விகளை சந்தித்து வருகிறது. இது குறித்து சரத் பவார் கூறுகையில், இந்தியாவில் ஏராளமான திறமையான இளம் கிரிக்கெட் வீரர்கள் உள்ளனர். எனினும் ரோஹித் சர்மா, ரவீந்திர ஜடேஜா போன்ற இளம் வீரர்கள் எதிர்பார்த்த அளவுக்கு சிறப்பாக விளையாட வில்லை.

ஒருகாலத்தில் மும்பை, பெங்களூர், சென்னை போன்ற நகரங்களில் இருந்த மட்டும்தான் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உருவெடுத்தனர். தற்போது உத்தரபிரதேசம், ஜார்கண்ட் உட்பட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் கிரிக்கெட் வீரர்கள் உருவாகி இருக்கிறார்கள். இவர்கள் இன்னும் சிறந்த வீரர்களாக உருவாக சிறிது நாட்கள் ஆகும் என்று தெரிவித்துள்ளார்.

# சச்சினின் 90 இலட்சம் நன்றிகள்

சமூக வலைத்தளமான "பேஸ்புக்கில்" இந்திய அணியின் கிரிக்கெட் நட்சத்திரம் சச்சினை பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை, 90 இலட்சத்தை தாண்டியது.

கடந்த 2011, செப்டம்பர் மாதம் சச்சின், "பேஸ்புக்கில்" இணைந்தார்.



இதில் தனது கருத்துக்களை "வீடியோ" மூலமாகவும் தெரிவித்து வருகிறார்.

முதன் முதலாக கணக்கைத் தொடங்கிய சச்சின், எனது பேஸ்புக்கிற்கு அனைவரையும் வரவேற்கிறேன். இந்தியாவுக்காக விளையாட வேண்டும் என்பது சிறுவயது கனவு. கடந்த 22 ஆண்டுகளாக உலக கோப்பை வெல்ல வேண்டும் என்பதும் கனவு தான். உங்களின் ஆதரவு இல்லாமல் இதுவெல்லாம் நடந்திருக்காது. இந்த வாய்ப்பை கொடுத்த கடவுள், எனக்காக பிரார்த்தித்தவர்களுக்கும் நன்றி, என, தெரிவித்து இருந்தார்.

இது வெளியான அடுத்த சில மணி நேரங்களில் 4 லட்சம் பேர், சச்சினை பின்பற்றத் தொடங்கினர். இப்போது "பேஸ்புக்கில்" சச்சினை பின்பற்றுபவர்கள் எண்ணிக்கை, 90 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதுகுறித்து சச்சின் வெளியிட்ட "பேஸ்புக்" செய்தியில்." என்னை ஸ்பெஷலாக உணரச் செய்த அனைவருக்கும், 90 இலட்சம் நன்றிகள்," என தெரிவித்துள்ளார்.

# சஞ்சனாவின் காதல் வலையில் ஹோலி?

காதல் செய்வீர் எனும் திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானவர் நடிகை சஞ்சனா. இந்தப் படத்திற்கு பிறகு அவருக்கு தமிழில் நடிக்க வேறு எந்த வாய்ப்பும் வரவில்லை. இதனைத்தொடர்ந்து அவர் கன்னடம் மற்றும் தெலுங்கு திரைப்படங்களில் நடிப்பதில் கவனம் செலுத்தி வந்தார். இந்நிலையில்தான் சஞ்சனாவும், விராட் கோலியும் காதலித்து வருவதாக கூறப்பட்டது. இருவரும் ஜோடியாக பல இடங்களில் வலம் வந்த வண்ணம் இருந்தனர். இருப்பினும் இருவரும் தங்களுக்குள் காதல் இல்லை என்று திட்டவட்டமாக மறுத்து வந்தனர். இது குறித்து நடிகை சஞ்சனா கூறியதாவது. விராட் கோலியுடன் சுற்றியது உண்மைதான். அதற்காக காதல் என்று சொல்லிவிட முடியாது. நாங்கள் இருவரும் நண்பர்கள் மட்டுமே, எங்களுக்குள் காதல் கிடையாது என்று சஞ்சனா தெரிவித்தார்.



## இனவெறியைத் தூண்டும் வகையில் செயற்பட்ட ஹங்கேரி காற்பந்து அணிக்கு அபராதம்

இனவெறியைத் தூண்டும் வகையில் செயற்பட்டதால் ஹங்கேரி காற்பந்து அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் ஹங்கேரி- இஸ்ரேல் அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான காற்பந்து போட்டி நடைபெற்றது.

அப்போது ஹங்கேரி அணியின் ஆதரவாளர்கள் சிலர், யூதர்களுக்கு எதிராக இனவெறியைத் தூண்டும் வகையில் பாடல் பாடியதோடு, கேலி செய்யும் வகையிலான சின்னங்களையும் காட்டியுள்ளனர். இதையடுத்து தவறு நடந்ததை ஒப்புக்கொண்ட ஹங்கேரி காற்பந்து சம்மேளனம், அதற்காக வருத்தமும் தெரிவித்திருந்தது.

இதுதொடர்பாக விசாரணை நடத்திய பிஃபா ஒழுங்கு நடவடிக்கை ஆணையம், ஹங்கேரி அணிக்கு ரூ.23 இலட்சம் அபராதம் விதித்ததோடு, வரும் மார்ச் 22ஆம் திகதி நடைபெறவுள்ள ருமேனியா-ஹங்கேரி இடையிலான உலகக் கிண்ண தகுதிச்சுற்று ஆட்டத்தின்போது ஹங்கேரி ரசிகர்கள் மைதானத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அறிவித்துள்ளது. பிஃபாவின் இந்த நடவடிக்கை மிகக் கடுமையானது என்று ஹங்கேரி காற்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## விளையாட்டுத் துளிகள்

- ✔ 'பயிற்சியாளர் டேவ் வாட்மோரின் ஆலோசனைகள் பயனுள்ள வகையில் அமைந்துள்ளன, வீரர்களின் தன்னம்பிக்கையும் வெகுவாக அதிகரித்துள்ளது' என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கேப்டன் மிஸ்பா உல் ஹக் கூறியுள்ளார்.
- ✔ மேற்கிந்திய தீவு அனுபவ வீரர் சந்தர்பால். இங்கிலாந்தின் டெர்பிஷயர் கவுண்டி கிளப் அணிக்காக விளையாட 2 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.
- ✔ ஐபிஎல் டி20 தொடரைப் போல, பாகிஸ்தான் பிறிமியர் லீக் டி20 தொடரை இந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்துவது குறித்து பாக். கிரிக்கெட் வாரியம் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.
- ✔ இந்திய கிரிக்கெட் வாரியத்தின் செயற்குழு கூட்டம் அடுத்த வாரம் மும்பையில் நடைபெற உள்ளது. இதில் இந்திய அணியின் சமீபத்திய மோசமான தோல்விகள் குறித்து ஆலோசிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ✔ இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இந்திய அணிக்கு வெற்றிக்கான வாய்ப்புக்கள் சற்று அதிகமாகக் காணப்படுவதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரும், நேர்முக வர்ணனையாளருமான ஜெப்றி போய்கொட் தெரிவித்துள்ளார்.
- ✔ இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க உலகில் எந்த அணியிலும் இடம்பெறுவார் என இலங்கை அணியின் சகலதுறை வீரர் ஜீவன் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.
- ✔ ரஞ்சிக் கிண்ணக் கிரிக்கெட்டில் காலிறுதி ஆட்டத்தில் சவுராஷ்டிரா அணிக்காக் அபாரமாக விளையாடிய புஜாரா இரட்டை சதம் அடித்தார். ( 261 ஓட்டங்கள் -275 பந்து. 40 பவுண்டரி, 1 சிக்சர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூனியர் சச்சினின் ஆட்டம் ஆரம்பம்


சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன், 14 வயதுக்குட்பட்டோருக்கான மும்பை அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் அர்ஜுனின் ஆட்டத்தை வரும் 20ம் திகதி அகமதாபாத் மைதானத்தில் காணலாம்.

கடந்த வருடம் யூன் மாதமே மும்பை கிரிக்கெட் அசோசியேஷன் சார்பில் 14 வயதுக்குட்பட்டடோருக்கான கிரிக்கெட் வீரர்களைத் தெரிவு செய்யும் போட்டிகள் இடம் பெற்றன.

இதில் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் கலந்து கொண்டார்.

12 வயதேயான அர்ஜுன், இந்தப் போட்டியில் ஒரு சிக்சர், 14 பவுண்டரிகள் உட்பட மொத்தம் 124 ஓட்டங்கள் எடுத்து தனது அணி இறுதிப் போட்டிக்குள் நுழைய உதவினார்.



சிட்னி சர்வதேச டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு முன்னேறிய மகிழ்ச்சியில் சீனாவின் லி நா.

இந்த சிறப்பான ஆட்டமே இவரை 14 வயதுக்குட்டோருக்கான வீரர்கள் தகுதிப் பட்டியலில் இடம் பிடிக்கச் செய்துள்ளது.

முன்னதாக இவர் புனேயில் நடைபெற்ற கேடன்ஸ் கிண்ணத்திற்கான விளையாட்டுப் போட்டியில் அறிமுகமான முதல் ஆட்டத்தில் அர்ஜுன் 39 பந்துகளில் 65 ஓட்டங்கள் எடுத்தார்.

இடது கையால் பந்து வீசும் அர்ஜுன், அடுத்து 2011-ல் நடைபெற்ற மற்றொரு போட்டியில் சிறப்பாக பந்து வீசி 22 ஓட்டங்கள் கொடுத்து 8 விக்கெட்டுக்கள் எடுத்திருந்தார்.

அர்ஜுன் தனது அப்பா சச்சினுடன் பல முறை இந்திய அணியின் பயிற்சி முகாம்களில் தலைகாட்டியிருக்கிறார்.

அத்துடன்அர்ஜுனின் ஆர்வத்தையும், ஆட்டத்தையும் சச்சின் தன் செல்போனில் படம்பிடித்து அதை பின் அவருக்குக் காண்பித்து தவறுகளைத் திருத்திக்கொள்ள உதவுவா ம்.

## தேசத்திற்கு மகுடம் கரப்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தேசத்திற்கு மகுடம் கரப்பந்தாட்டபோட்டிகள் எதிர்வரும் 12ஆம் , 13ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி,மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அணிகள் இப்போட்டியில் பங்கு பற்றவுள்ளன.

பதிவு செய்யும் அணிக ்ள் காலை 8:30 மணிக்கு முன்னர் தட து பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கச் செயலாள ர் சுரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

## பலத்த எதிர்ப்புக்கு மத்தி...

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை குறித்த பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கை மீதான விவாதம் எதிர் கட்சிகளின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் பாராளுமன்றத்தில் நேற்று ஆரம்பமாகியது.

குற்றப் பிரேரணை சட்டத்திற்கு முரணானது என்றும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது எனவும் எதிர்க் கட்சிகள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்தன.

எனினும் தெரிவுக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்துக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அனுமதியளித்தார்.

இதன் போது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டதால் பாராளுமன்றத்தில் பெரும் அமளி ஏற்பட்டது.

இதனால் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ 10 நிமிடங்களுக்கு சபையை ஒத்தி வைத்தார்.

முழுமையாக்கப்படாத அறிக்கை ஒன்றைப் பற்றி நாடாளுமன்றத்தில் எவ்வாறு விவாதிப்பது என்று சபையில் கேள்வி எழுப்பிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள், தெரிவுக் குழுவின் அறிக்கை தொடர்பில் ஆராய தங்களுக்கு ஒருமாத கால அவகாசம் வேண்டும் என்றும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனால், சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதனை அடுத்து சபையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்த சபாநாயகர், எதிர்க் கட்சியினரின் கோரிக்கைக்கு பின்னர் பதிலளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதனை அடுத்தும் கடும் ஆட்சேபத்தை வெளியிட்ட ஜனநாயக தேசிய கூட்டணியின் உறுப்பினர்கள்,சட்டத்திற்கு முரணான குற்றப் பிரேரணை தொடர்பான விவாதத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை எனக் கூறி சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதேவேளை, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை மற்றும் அது தொடர்பிலான நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்கா தமது கவலை வெளியிட்டுள்ளது. அத்துடன் நீதித் துறையின் மீதான நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத்தின் அழுத்தம் பற்றி தீவிரமான கேள்விகளையும் எழுப்பி உள்ளது என்று இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்தார்.

அதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை குறித்து கவலையடைவதாக இதற்கு முன்னரும் தாம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் சவுதி அரேபியாவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ள ரிசானா நபீக் குறித்து தகவல்கள் வெளியிட அமெரிக்கா மறுத்துள்ளது.

ஏனெனில், ரிசானா நபீக் கு த்து தாம் அறிந்திருக்கவில்லை எனவும்அது பற்றி ஆராய்ந்து கருத்து வெளியிடப்படும் எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை

வட மாகாணத்தில் புதிய கால் பந்தாட்ட மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்து மற்றும் உடற்தகுதி பரீட்சை என்பன எதிர்வரும் 26ம் திகதி நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பரீட்சை யாழ்ப்பாண கால் பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பயிற்சி கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளதுடன் கருத்தரங்குகளை மேற்கொள்வதற்காக கொழும்பில் இருந்து பயிற்சியாளர்கள் வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூடைப்பந்தாட்ட போட்டி

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட விளையாட்டுக்கழகங்களிற்கு இடையில்நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தி வரும் இப்போட்டி யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.

இப்போட்டியில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய அணியினை எதிர்த்து கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணிமோதியது.

இதன்போது, கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழக அணி 53:39 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

வடமராட்சி கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்தும் மாபெரும் மென்பந்து 20இற்கு இருபது சுற்றுப் போட்டி எதிர்வரும்15-ம் திகதி நடைபெறவுள்ளது.

போட்டிகளுக்கான அணிகள் தயாராகவுள்ளதுடன் மேலதிகமாக இணைய விரும்பும் கழகங்கள் 0778893330, 0776177688 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(3)

## யாழில் மழை...

பங்களைச் சேர்ந்த 219 பேரும் பாதிப்படைந்துள்ளனர். மொத்தமாக 5 ஆயிரத்து 330 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 388 பேர் பாதிப்படைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ- 6)

## நீதிமன்ற வளாக..

ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு இவர்கள் தயாராக இருந்தனர்.

இதேவேளை, நூற்றுக்கணக்கான பாதுகாப்புப் படையினர் அங்கு பணியில் அமர்த்தப்பட்டிருந்த னர்.

இராணுவப் படையணிகள் மற்றும் பொலிஸ் படையணிகளைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் பேரே இவ்வாறு குவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன், நீர்ப் பீய்ச்சியடிக்கும் வாகனங்கள், கலகத்தடுப்பு பிரிவு படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சுப் படையணி போன்றனவும் குறி பகுதிக்கு அழைக்கப்பட்டனர்.

இதேவே ள மழைக்கு மத்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈ பட்ட சுமார் மூவாயிரம் பேரடங்கிய வழக்குன ஞர்கள், பொலிஸாரால் போடப்பட்டிருந்த இரும்பு தடுப்பு வேலிகளையும் உடை த்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல முற்ப டனர்.

குற்றப்பிரேரணையை வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்காகவே ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரி மாளிகையை நோக்கிப் புறப்படவிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தடுத்து நிறுத்தப்பட்டது. (எ-11)

## வவுனியாவில் இராணுவ வீரரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா நாவற்குளம் பிரதேசத்தில் இராணுவ வீரர் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்றுக்காலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தின் பற்றைக்காட்டில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலினை அடுத்து இச்சடலம் மீட்கப்பட்டதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஹிங்குராங்கொட பகுதியைச் சேர்ந்த ஏ.எம். பிரியந்த குமார (வயது 31)எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பூநாவை பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றி வந்த குறித்த இராணுவ வீரர், கடந்த டிசம்பர் மாதம்31 ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இராணுவ வீரரின் தாயார் கடந்த 6ம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் இந்நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.(எ-11)

## சுதந்திரமாக தொழில்..

என்பது பாதிப்படைந்து வருகின்றது. இயற்கையாலும் செயற்கையாலும் வட பகுதி மீனவர்கள் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர்.

இனிவரும் காலங்களில் எமது கடற்தொழிலாளர்கள் கடலுக்கும் செல்லமுடியாத நிலை கூட காணப்படலாம்.

வடக்கில் சில பகுதிகளில் குறிப்பாக மீன் வளம் கொளிக்கும் இடங்களில் இராணுவத்தின் பாஸ் நடைமுறை காணப்படுகின்றது. அவ்விடங்களில் நாம் பல கட்டுப்பாடுகளுடனேயே மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றோம்.

எனினும் தென்னிலங்கை மீனவர்கள் எத்தடையும் இன்றி அங்கு வந்து இராணுவப் பாதுகாப்புடன் எமது வளத்தை எமது கண்ணுக்கு முன்னால் அள்ளிச் செல்கின்றனர் என்று நாம் அவருக்கு தெரிவித்திருந்தோம் என்றார். (எ-4)

## 10 நாட்களில்...

தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தத் த்கவல்கள் அடிப்படையில், யாழ் குடாநாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த 2012ஆம் ஆண்டு 620 பேர் என உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இந்த வருடமும், நேற்றுவரை 40 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் டெங்கு நோயாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் நேற்று முன்தினம் 3 பேரும் நேற்று 3 பேரும் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு, சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்றைய தினம் ஒருவரும் டெங்கு நோயாளர் என்ற சந்தேகத்தின் பேரில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளாகியவர் களின் எண்ணிக்கையை உடனடியாக வெளியிட முடியாது எனவும் அந்தத் திணைக்கள் வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-6)

## ரிசானாவின் கழுத்தை...

ஐரோப்பிய ஒன்றியம் பல தடவைகள் சவுதி அரசிடம் கோரிக்கை முன்வைத்ததாக கெத்தரின் ஏஸ்டன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

கொலை குற்றம் இடம்பெற்றவேளையில் ரிசானா ஒரு சிறிய பெண் என அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ரிசானாவின் மரணத்திற்காக அவரது குடும்பத்தினருக்கும், குழந்தையை இழந்த குடும்பத்தினருக்கும் அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும், ரிசானவின் மரணத்தால் குழந்தையின் பெற்றோரின் இழப்பு குறைக்கப்படும் என தான் நம்பவில்லை எனவும் கெத்தரின் ஏஸ்டன் குறிப்பிட்டுள்ளார்.(எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடிதம்

## பெயரிடப்படாது அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு சமுகமளிக்குமாறு கோரி மாணவர்களின் வீடுகளிற்கு கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

அனுப்புனரின்பெயர்இன்றிகிடைக்கும்கடிதங்களால் மாணவர்கள் மிரண்டு போயுள்ளனர்.

'பயங்கரவாதிகள் மீள ஒருங்கிணையத் தயார் என்ற தலைப்பிலும்', 'பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை தீய சக்திகளிடமிருந்து பர்துகாத்துக் கொள்ளுங்கள்' என்ற தலைப்பிலும் இரு கடிதங்கள் ஒரு கடித உறையினுள் வைத்து அனுப்பப்பட்டுள்ளன.

அக்கடிதங்களில் பயங்கரவாதிகளின் எதிர்காலத் திட்டங்கள், புலம்பெயர் குழுக்களின் வேலைத்திட்டங்கள் என்ற உப தலைப்புக்களில் அதற்கான விளக்கங்களும் கொடுக்கப் பட்டு உள்ளன.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் (உருத்திர குமாரன் தலைமை), உலகத் தமிழர் பேரவை (அருட்திரு.இம்மானுவேல் அடிகளார் தலைமை), தமிழர் ஒருங்கிணைப்புக் குழு(நெடியவன் தலைமை),தலைமைச் செயலகம் (விநாயகம் தலைமை) ஆகிய புலம்பெயர் அமைப்புக்கள் ஐ.நா பேரவையூடாக இலங்கையின் அமைதி நிலைக்கும், இறைமைக்கும் குந்தகம் விளைவிக்க முயல்கின்றன எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, முன்னிலை சோசலிஷ கட்சி ஆகிய கட்சிகளும் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான மாணவர் அமைப்பு, யாழ்.பல்கலைக்கழக மாணவர் அமைப்பு ஆகிய அமைப்புகளும் அசம்பாவிதங்களைத் தூண்டுகின்றன எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைவிட தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களான முன்னிலை சோசலிஷ கட்சியின் உதுல் பிரேமரட்ண, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் சஞ்சீவ பண்டார ஆகியோரையும் அக் கடிதம் சாடியுள்ளது.

இறுதியில் இங்ஙனம் சுயாதீன புத்திஜீவிகள் அமைப்பு என அதில் உள்ளது.

யாழ்.பல்கலைக்கழகம் 40 நாட்களுக்கும் மேலாக இடம்பெற்று வந்த மாணவர் பகிஷ்கரிப்பை அடுத்து கடந்த 4 நாட்களாக தனது செயற்பாட்டினை ஆரம்பித்த போதிலும் மாணவர் வரவு மிகக் குறைவாகவே இருந்து வருகின்றது.

இந்நிலையிலேயே மாணவர்களுக்கு இவ்வாறான தொரு கடிதம் அனுப்புனரின் பெயர் குறிப்பிடப்படாத நிலையில் மாணவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-4)

# நல்லூர் கோட்ட அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான அவசரக் கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நல்லூர்க் கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

இதில் அதிபர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா கேட்டுள்ளார். (ந)

# ஐ.நா பாரிய சவால்களை இலங்கையில் எதிர்கொண்டது

## விஜய் நம்பியார் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு பாரிய சவால்களை எதிர்நோக்க நேரிட்டதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் முன்னாள் பிரதம அதிகாரி விஜய் நம்பியார் தெரிவித்துள்ளார்.

சிவிலியன் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. மேலும் பல்வேறு விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

அரசியல் முரண்பாட்டு நிலைமைகளின் போது மனித உரிமை விவகாரங்கள் தலைதூக்கும். இவ்வாறான சூழ் நிலைகளின் போது மிகவும் நிதானமாக செயற்பட வேண்டிய கடப்பாடு காணப்படுகிறது.

எவ்வாறெனினும், மோதல் நிலைமைகளின் போது சிவிலியன் பாதுகாப்பை உதாசீனம் செய்ய முடியாது.

இலங்கைப் போரின் போது ஐக்கிய நாடுகள் அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் சார்ள்ஸ் பெற்றி தலைமையிலான குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின் மூலம் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

இறுதிக்கட்டப் போரின் போது சிவிலியன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மிகவும் சவால் மிக்கது.

உலக நாடுகள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நடவடிக்கைகளை கண்காணித்து வருகின்றமையால் சவால்கள் அதிகமாகக் காணப்படுகின்றது என விஜய் நம்பியார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடகப்பிரிவிற்கு அளித்த நேர்காணலின் போதே விஜய் நம்பியார் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)


## வாடகைக்கு

விளான் யூவனியர் கோயில் முன்பாக பண்டத்தரிப்பு - செந்தன்குளம் பிரதான வீதியில் 2 பரப்பு காணியுடன் கடையும் வாடகைக்கு/குத்தகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0776032332, 0772236014

(1459)

## 2014 Biology Exam Marks List -08

| No | பெயர் | புள்ளி | பாடசாலை |
|---|---|---|---|
| 01 | S.அபிராமி | 94 | J/V.G.H.S |
| 02 | T.பிரணவி | 90 | J/V.G.H.S |
| 03 | A.யதுஷ்னா | 84 | J/V.G.H.S |
| 04 | S.ஜேன்மதுஷா | 82 | J/C.G.C |
| 05 | V.துவாரகா | 81 | J/U.C |
| 06 | S.லதுர்ஷா | 81 | M/P.C.C |
| 07 | S.நிருசிகா | 81 | J/C.G.C |
| 08 | A.சரண்யா | 80 | J/V.G.H.S |
| 09 | K.கிருஷாந்தினி | 80 | J/H.L.C |
| 10 | B.பாலஜீவன் | 78 | J/K.H.C |
| 11 | A.தனுஜா | 77 | J/V.G.H.S |
| 12 | G.செனயா | 76 | J/V.G.H.S |
| 13 | V.விசாகஜா | 74 | J/V.G.H.S |
| 14 | S.மிதிலா | 74 | J/C.C.G |
| 15 | R.பானுவரன் | 73 | J/H.C |
| 16 | J.ஆரூரன் | 73 | J/H.C |
| 17 | K.அபிநயா | 71 | J/V.G.H.S |
| 18 | S.சிந்துயா | 71 | J/H.L.C |
| 19 | K.துஷ்யந்தினி | 70 | J/V.G.H.S |
| 20 | S.ஜனார்த்தனன் | 69 | J/S.J.C |
| 21 | S.சகிலா | 66 | J/V.G.H.S |
| 22 | S.ஜதுஷன் | 65 | J/H.C |
| 23 | M.பிரசாந்தினி | 63 | J/C.G.C |
| 24 | T.வைஷ்ணவி | 62 | J/V.G.H.S |
| 25 | P.சிவரூபன் | 60 | J.C |

**Science Corner**
**2014 Batch புதிய ஆரம்பம்**

கொண்டு செல்லல்

நேரம்: சனி, ஞாயிறு 9.30 - 10.45
ஆரம்பம்: 12.01.2013 (சனி)

(1458)

**Science Corner**
**2015 Batch**

Time table
Batch 01 - சனி, ஞாயிறு (am) 11.00 - 12.30
Batch 02 - சனி, ஞாயிறு 3.00 - 4.30

சு.பொன்திவாகரன்



மழலைகளுக்கான விளையாட்டுப் பொருட்களுக்கு 10% விலைக்கழிவு மற்றும் மழலைகள் ஆண், பெண்களுக்கான உடைகள், 100% (Cotton) உடைகள் சகலவிதமான மழலைகளுக்கான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

3000/- இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கான குலுக்கல் 14.01.2013 10 மணியளவில் நடைபெறும்.

**API Baby Mart**
& Show Room

267, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.




## மணல் விற்பனைக்குண்டு

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர் - 23,000/-**

தொடர்புகளுக்கு
தீபன்
0722694462

(1451)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

12-01-2013 9.00am & 4.00pm
16-01-2013 3.00pm

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..

## Deutsch, Dutch, French, English

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் – டொச், நெதர்லாந்து – டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் 12, 13/01/2013 சனி, ஞாயிறு தினங்களில் ஆரம்பமாகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

தொடர்பு: விவேகானந்தா அக்கடமி
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.